அவசரகாலச் சட்டத்தின்கீழ் **சிறில் ரணதுங்காவின் அனுமதியின்றி**

# எவரும் எவரையும் கைதுசெய்ய முடியாது


விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 மாசி: 11 றஜபு பிறை: 26 இதழ்: 10

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 23-02-1990



University of Jaffna Sri Lanka
RECEIVED
1990-2-26
Periodicals ...
Library


(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவின் அனுமதியின்றி அவசரகாலச் சட்டத்தின் கீழ் எவருக்கும் எவரையும் கைது செய்யும் அதிகாரம் கிடையாது.

வெளிவிவகார அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜயரத்ன இத்தகவலைத் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் மேலும் தகவல் தெரிவித்ததாவது:

ஒருவர் கைது செய்யப்படும்போது தேவையான காரணங்கள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில், பொது மக்கள் தற்பாதுகாப்பின் பொருட்டுகைது

(8-ம் பக்கம் பார்க்க)

## மதிய உணவாக பால் அருந்திய மாணவர்கள் ஆஸ்பத்திரியில்

(கொழும்பு)

பாடசாலையொன்றில் மதிய உணவாக பால் அருந்திய அறுபது மாணவர்கள் சுகவீனமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

கொழும்பிலுள்ள ஒரு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்களே இவ்வாறு சுகவீனமடைந்தவர்களாவர்.

கடந்த 20-ம் திகதி வழக்கம் போல் மதிய உணவாகப்பால் அருந்திய மாணவர்கள் பலர் வாந்தி எடுத்தவுடன் வயிற்று வலியாலும் அவஸ்தைப்பட்டார்கள்

சுகவீனமடைந்த மாணவர்கள் உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்

(8ம் பக்கம் பார்க்க)

# கலைஞர் - தமிழ்க்குழுக்கள்- பேச்சுவார்த்தை விபரங்கள் இந்தியபிரதமரிடம்கையளிப்பு!

(புதுடில்லி)

**இலங்கை இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி தமிழ்க்குழுக்களுடன் மேற்கொண்ட பேச்சுக்களின் விபரங்கள் பிரதமர் திரு. வி. பி. சிங்கிடம் மத்திய அமைச்சர் திரு. முரசொலி மாறனல் நேற்று கையளிக்கப்பட்டது.**

நேற்றுக்காலை தமிழக முதல்வர் திரு. கருணாநிதி, விடுதலைப் புலிகள், ஈரோஸ் தவிர்ந்த ஏனைய குழுக்களுடன் இரண்டாம் சுற்றுப்பேச்சுக்கள் நடாத்தினர். இதன் போது தெரிவிக்கப்பட்ட கருத்துக்களும் விடுதலைப் புலிகள், ஈரோஸ் இயக்கத்தினர் முன்வைத்த கருத்துக்களும் முரண்பட்டதாக இருந்தன.

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் விடுதலைப் புலிகளுக்கு அதிக எண்ணிக்கையான இடங்களைத் தாம் அளிப்பதாகவும் மாகாண சபையைத் தாம் கலைக்க விரும்பவில்லையென்றும் ஈ பி. ஆர். எல். எவ், ரெலோ,

(8ம் பக்கம் பார்க்க)

## 'எந்த ஒரு தமிழ்க் குழுவிடமும் தீர்வு எதுவும் திணிக்கப்படவில்லை'

- கலைஞர்

(சென்னை)

எந்தவொரு இலங்கைத் தமிழ்க்குழுவிடமும் முதலமைச்சர் என்றவகையில் தீர்வுக்கான வழிவகைகள் எதனையும் திணிக்கவில்லை என்று தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ என். டி. எல். எவ்., புளொட், ரெலோ ஆகிய அமைப்புகளுடன் நேற்று ஒரு மணிநேரம் அவர் பேச்சுவார்த்தை நடாத்தினர்.

இந்தப் பேச்சுக்களின் பின்னா பத்திரிகையாளரிடம்

(8ம் பக்கம் பார்க்க)

## ரஹிமுடன் நேற்று 64 பேர் உடுப்பிட்டியில் விடுதலை

(வடமராட்சி)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கியஸ்தர்களின் ஒருவரான ரஹீம் நேற்றுக் காலை 10-30 மணியளவில் விடுதலை செய்யப்பட்டார்.

உடுப்பிட்டி இந்திய அமைதி காக்கும் படையினரின் முகாமில் வைத்து அவர் நேற்று விடுவிக்கப்பட்டார். அவருடன் சேர்த்து மேலும் 64 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

எஞ்சியுள்ள 60 பேர் இன்று வெள்ளிக்கிழமை தொண்டமனாறு முகாமில் வைத்து விடுவிக்கப்படுவர் எனத் தெரிய வருகிறது (51)

## பத்மநாபா கலைஞரை சந்திப்பார்

(சென்னை)

ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்தின் செயலாளர் நாயகம் திரு. க. பத்மநாபா தமிழக முதல்வர் திரு. கருணாநிதியை இன்னும் ஓரிரு தினங்களில் சந்தித்துப் பேச இருக்கிறார்.

## யாழ்.குடாநாட்டிலிருந்து அமைதிப்படை 26-ம் திகதி முற்றாக வெளியேறிவிடும்?

(வடமராட்சி)

யாழ். குடாநாட்டிலிருந்து இந்திய அமைதிப்படை எதிர் வரும் 26-ம் திகதி திங்கட்கிழமை முற்றாக வெளியேறிவிடும் என அறியப்படுகிறது.

இதேவேளையில் வடமராட்சிபிலிலுள்ள நவிண்டில், உடுப்பிட்டி, வல்லை முகாம்களில் இருந்து அமைதிப்படையினர் வெளியேறுவதற்கான ஆயத்தங்கள் தற்போது துரிதமாக நடைபெற்றுவருவதாக அப்பகுதியிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (51)

## உதிரிப்பாகங்கள் இல்லை பருத்தித்துறை பஸ் சேவை நிறுத்தப்படலாம்!

(வடமராட்சி)

பருத்தித்துறை.வ.பி.போ.ச பஸ் டிப்போ பஸ் சேவை எந்நேரத்திலும் நிறுத்தப்படலாம் என்று அஞ்சப்படுகிறது.

பல வருடங்களாக இலங்கைப் போக்குவரத்துத் தலைமைக் காரியாலயத்தில் இருந்து எவ்வித உதிரிப்பாகங்களும் மேற்படி டிப்போவிற்கு அனுப்பப்படவில்லை.

(8ம் பக்கம் பார்க்க)

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் விளக்கம்

**கேள்வி பதில்**

5-ம் பக்கம் பார்க்க

## யாழ். மாவட்டத்தில் இன்று பயிலுநர் ஆசிரியர் தெரிவு பட்டியல் வெளியிடப்படும்

(யாழ்ப்பாணம்)

இருபத்தையாயிரம் பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்காக யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களின் பட்டியல் இன்று சகல கோட்டக்கல்வி நிலையங்களிலும், உதவி அரசாங்கஅதிபர் பணிமனையிலும் பார்வைக்கு வைக்கப்படும். இத்தகவலை யாழ்ப்பாணப்பிரதேச கல்வித்திணைக்களஉதவிப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி தெரிவித்தார்.

கல்விச்சேவை ஆணைக்குழு தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸ் விடுத்த பணிப்புரைக்கமைய இந்நியமனங்கள் மார்ச் மாதம் முதலாம் திகதிக்குமுன் வெளியிடப்படுகின்றது. யாழ். மாவட்டத்தில் ஆயிரத்து இருபத்திநாலு பயிலுநர் ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (12)

## இராமநாதபுரம் அகதிகள் முகாமில் அகதிகள் - தமிழ்க்குழு மோதல்

(சென்னை)

இராமநாதபுரம் அகதிகள் முகாமில் தங்கியிருக்கும் அகதிகளுக்கும் அங்கிருக்கும் தமிழ்க்குழு உறுப்பினர்களுக்குமிடையில் மோதல் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

### முகாமிற்கு பலத்த பாதுகாப்பு

இம் மோதல் சம்பவத்தையடுத்து அங்கிருந்து தமிழ்க் குழுக்களை வெளியேற்றுமாறு அகதிகள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அச் செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

அண்மையில் இராமநாதபுரம் அகதிகள் முகாமருகில் உள்ள பொலிஸ் நிலையம் ஒன்றின் மீது துப்பாக்கி பிரயோகத் தாக்குதல் நடைபெற்றதை

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

நம்பிக்கையும் நேர்மையும் திடகாத்திரமும், நிர்வாக அனுபவமும் கொண்டவர்களிடமிருந்து பொறுப்பான பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. முழு விப்ரங்களுடன் 28-2-90ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 565 C/o., ஈழநாடு, யாழ்ப்பாணம.

(ஏ 565)

### விற்பனைக்கு

புங்குடுதீவு 3ம் வட்டாரத்தில் சர்வோதயம் ஸ்தாபனத்திற்கு பின்பக்கமாக பத்து பரப்புகாணி உடன் விற்பனைக்உண்டு. தொடர்பு கொள்ளவும்: திருமதி நாகம்மா நாகநாதி, ஆஸ்பத்திரி வீதி, புங்குடுதீவு 2.

(சி 3518)

## தொழிற் கல்வி பாடம் போதிக்க கோரிக்கை

(பருத்தித்துறை)

யாழ்பாணப்பல்கலைக்கழகம் தொழிலாளர் கல்வியை ஆரம்பிப்பதற்கு பல முயற்சிகளில் ஈடுபட்டிருந்த போதிலும் அதற்கான அனுமதி வழங்கப்படவில்லையென யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராசா தெரிவித்தார்.

இதுபற்றி பேராசிரியர் மேலும் தெரிவித்ததாவது பல்கலைக்கழக ஆணைக்குழுவிலும் கூட இதுபற்றி கோரிக்கை விடப்பட்டபோதும் அதுகூட பலனளிக்கவில்லையென்றும் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்திலுள்ள தொழிற் சங்கங்களும் பொது அமைப்புகளும் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு கோரிக்கை விடுத்து, சம்பூந்தப்பட்ட பயிற்சி நெறியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக்கழக துணைவேந்தருக்கு மகஜர்கள் அனுப்ப ஏற்பாடு செய்து வருகின்றனர். (12-எஸ்)

## கீரிமலையில் தேர் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நகுலேஸ்வரம் – கீரிமலை அருள்மிகு ஸ்ரீ நகுலாம்பிகா தேவி சமேத நகுலேஸ்வர ஆலயத்தில் இன்று காலை 8 மணிக்கு தேர் உற்சவமும் மாலை சிவராத்திரி நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

நான்கு ஜாமப் பூசை வழிபாடுகளுடன், ஜோதிலிங்கத்திற்கும் லிங்கோற்பவருக்கும் விசேட அபிஷேகமும் நடைபெறும்.

நாளை சனிக்கிழமை தீர்த்தோற்சவ நிகழ்ச்சியும், நாளை மறுதினம் விசேட அபிடேக நிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (க)

## கிறீன் பீல்ட் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். சாள்ஸ் மகா வித்தியாலயத்துக்கு புதிய மூன்று மாடிக் கட்டிடமும், பாரிய நீர்த்தாங்கியும் அமைத்து. தற்போது துரித வேலைகள் நடைபெற்றுவருவதைப் பாராட்டி யாழ் நகர் கிழக்கு கொத்தணி அதிபர் திரு. ஏ அல்பேட்டுக்கு யாழ்ப்பாணம் கிறீன் பீல்ட் சனசமூகநிலையம் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

இந்த வாழ்த்துச் செய்தியின் பிரதி ஒன்றை யாழ். மாவட்டக் பிரதிக் கல்விப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைத்துள்ளதாக மேற்படி சனசமூகநிலையத்தின் காரியதரிசி திரு தி. மைக்கேல் தெரிவித்தார். (வி)

# சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி மேற்கு முத்துக்குமார சுவாமி கோவில் சிவராத்திரி விழா இன்று நடைபெற உள்ளது.

நான்கு ஜாமப் பூஜை வழிபாடுகளும், விசேட சொற்பொழிவு நிகழ்ச்சிகளும் இடம்பெறும் பண்ணிசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

0 0 0

நீர்வேலி அரச கேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் சிவராத்திரி விழா இன்று நடைபெறஉள்ளது.

நான்கு ஜாமப் பூசைகளும் விசேட சொற்பொழிவும் இடம்பெறும். (க)

0 0 0

புங்குடுதீவு மத்தி தென் பெருந்துறை சிவன் ஆலயத்தில் மஹா சிவராத்திரி விழா இன்று நடைபெற இருக்கிறது. மாவட்ட வைத்தியசாலை அதிகாரி எஸ் பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் தவத்திரு நாகலிங்கச் சுவாமியார், திரு முருகமருதி முருகேசு அவர்களும் பங்குபற்றுகிறார்கள். (101)

0 0 0

(யாழ்ப்பாணம்)

கரம்பன் குருமடத்தில் சிவராத்திரி விழா இன்று தேவார திருவாசக பாராயணம், கந்த புராணம் அடிமுடி தேடும் படலம் படிப்பு, பிரசங்கம் ஆகியன இடம்பெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

கரணவாய் உச்சில் புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் சமயச் சொற்பொழிவுகள், நாடகம், கவிதை நிகழ்வு வில்லுப்பாட்டு போன்ற பல நிகழ்ச்சிகளுடன் சிவராத்திரி விழா நடைபெறும்.

0 0 0

(யாழ்ப்பாணம்)

இன்பருட்டி காண்டீபன் விளையாட்டுக்கழகத்தில் நடைபெறவுள்ள விழாவில் விடுதலைப் புலிகளின் 'நடந்து வந்த பாதைகள்' என்ற வில்லிசை நிகழ்ச்சி நடப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது.

0 0 0

(யாழ்ப்பாணம்)

திருவள்ளுவர் சனசமுக நிலையத்தாரின் சிவராத்திரி விழா இன்று நிலைய மண்டபத்தில் சங்க தலைவர் எஸ். சபாலிங்கம் தலைமையில் நடைபெறும். விழாவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (12)

0 0 0

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கு செம்பி தோட்ட ஞான வைரவர் ஆலய வெள்ளிவிழா, மகா சிவராத்திரி விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இன்று ''அவளுக்கென்று மனம்'' ''வஞ்சத்தின் விளிம்பில்'' ''கவிச்சக்கரவர்த்தி'' ஆகிய நாடகங்கள் மேடையேறறப்படவுள்ளன.

0 0 0

(யாழ்ப்பாணம்)

சரவணை கொட்டாங்காடு ஞான வைரவர் தேவஸ்தானத்தில் சிவராத்திரி விழா நடாத்த ஏற்பாடாகியுள்ளது.

இவ்விழாவில் பல கலை நிகழ்ச்சிகள் திருமுறைப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. (ம)

## புதிய 'வயர்லெஸ்' கருவி

(யாழ்ப்பாணம்)

யாழ் ரயில் நிலையத்திற்கு மீண்டும் 'வயர்லெஸ்' கருவி கிடைத்துள்ளது. கொழும்பில் இருந்து இக்கருவி பிரத்தியேகமாக அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த மாதம் யாழ், புகையிரத நிலையத்திலிருந்த சக்தி வாய்ந்த வயர்லெஸ் கருவி திருடப்பட்டதை தொடர்ந்து இதுவரை கொழும்பு உட்பட பிரதான புகையிரத நிலையங்களுடன் எதுவித தொடர்பும் இன்றியே யாழ். புகையிரத நிலையம் இயங்கிவந்தது. (வி)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ஆத்மஜோதி தத்துவ நூலாசிரியர் திரு. த. சத்தியதாஸன் எழுதிய சனிமாற்றமும், ஸ்ரீசத்யசாயிபாபாவின் மறு அவதாரமாகிய பிரேம சாயி பாபாவின் அவதார அற்புதங்களும் அடங்கிய நூல் வெளியீட்டு வைபவம் நாளை சனிக்கிழமை காலை 10–30 வணியளவில் கீரிமலை யோக சுவாமிகள் மகளிர் தவ நிலையத்தில் நடைபெறும் அன்றையதினம் பூஜைகளும், ஆராதனைகளும் இடம்பெறும்.

## கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் உதவியினால் கட்டப்பட்ட சைக்கிள் பாதுகாப்பு நிலைய திறப்பு விழா நேற்று நடைபெற்றது.

யாழ் கோட்டக் கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா நிலைய கட்டடத்தை திறந்து வைத்தார்.

அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சபையினர் ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டனர். (க)


**90 A/L விஞ்ஞான மாணவர்களுக்கு**

**பௌதிக இரசாயனம்**

24-2-1990 நாளை ஆரம்பம்

Sat. & Sun. 5 p.m.

திரு. நாகரெட்ணம் (B. Sc.)

மணல்தறை லேன், கந்தர்மடம். (சி-564)

**VACANCY IN BAHRAIN**

2. Civil Engineers [Construction]
   B.sc Eng. / Diploma - with 6 years Exp.
2. Quantity Surveyors
   Attractive salary with full facilities.

Contact:

**A. K. SIVAGNANAM**
171 A, Brown Road,
Jaffna.

**NEEMS AGENCIES**
32 A, Horton Place,
Colombo - 7

(C 3517)

**கட்டிடம் கட்டுதல், தச்சுவேலை, பெயின்ரிங், வயரிங்**
போன்றவற்றிற்கான

**ஒப்பந்தகாரர்**

கட்டிடம், தச்சுவேலை, பெயின்ரிங், வயரிங் ஒப்பந்த வேலைகளுக்கு மேற்படி கூட்டுறவு அபிவிருத்தி சங்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

சகல கட்டிட வேலைகள், வீட்டிற்கான தளபாடம் போன்றவை ஒப்பந்த அடிப்படையில் செய்து கொடுக்கப்படும்.

இவற்றுடன் தொழிலாளர்களும் ஒப்பந்த அடிப்படையில் வேலை செய்வதற்கு வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்:

ஜனசக்தி கட்டிட கூட்டுறவுச் சங்க நிர்வாகி,

**ஜனசக்தி கட்டிட கூட்டுறவு அபிவிருத்திச் சங்கம்,**

மயிலணி வடக்கு, சுன்னாகம்.

(சி-3509)

**Project Management Services Ltd.**
33, Brown Road, Neeraviadi, Jaffna

Engineering Consultants & Project Managers

**CHARTERED CIVIL / STRUCTURAL ENGINEER**

An exciting opportunity has occurred in our organization for an experienced Engineer with a flair and capacity to lead the civil and Structural Engineering Section.

The prime area of work for this position is in structural design of multi - story buildings. As Section Leader you must have a flexible attitude and possess the ability to solve a variety of design problems and direct your staff to do likewise.

This senior position requires a Charted Engineer at least 35 years of age, with previous experience in similar capacity.

A very attractive salary will be offered to the successful applicant with excellent career prospects.

If you are the right person send a C.V. to the undermentioned on or before 28 February, 1990.

**Operations Manager**
**Project Management Services Ltd.,**
33, Brown Road,
Jaffna.

(C [illegible])


## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



**எம். கே. எப். ராஜ்குமார்**

(காங்கேசன்துறை)

**தோற்றம்:** 07-02-1930 **மறைவு:** 23-02-1985

எம்மை ஆருத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டீர்களே! எம்மிடம் எதையும் கூறுமல் மின்னல்போல் மறைந்தீர்களே! அன்பும், பண்பும், இனிய புன்னகையும் கொண்ட உங்கள் முகத்தை இனி எங்கு காண்போம். ஆண்டு நான்கு மறைந்தாலும் நீங்காது எங்கள் துயர்.

அன்பு மனைவியும், பிள்ளைகளும், மருமக்களும், சகோதரரும், உறவினரும், நண்பர்களும்.

(சி-3519)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிப்பூர் சட்டசபை தேர்தலில் தோல்வி
# ராஜீவின் தலைமைக்கு ஆபத்து
## மூத்த தலைவர்கள் கண்டனம்

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. ராஜீவ் காந்தியின் தலைமை பதவிக்கு ஆபத்து ஏற்படும் இக்கட்டான சூழ்நிலை உருவாகி வருகிறது. அண்மையில் மணிப்பூர் சட்டசபைக்கு நடைபெற்ற தேர்தலில் எதிர்க்கட்சி கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றியுள்ளன.

1989-ம் ஆண்டு பிற்பகுதியில் நடைபெற்ற இந்திய பொதுத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் படுதோல்வியடைந்தது. இதற்கு திரு. ராஜீவ் காந்தியே காரணமென காங்கிரஸின் மூத்த தலைவர்கள் பலரும் வெளிப்படையாகவே குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்நிலையில் காங்கிரஸின் ஆட்சியிலிருந்த மணிப்பூர் சட்டசபை தேர்தல் முடிவுகள் எதிர்க்கட்சி கூட்டணிக்கு சாதகமாகியுள்ளது. 58 இடங்களுக்கு நடைபெற்ற இத்தேர்தலில் எதிர்க்கட்சி கூட்டணி 32 இடங்களை கைப்பற்றியுள்ளது. மேலும் இத்தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு கிடைத்த வாக்குகளும் மிக மிகக் குறைவு. இம் முடிவும் காங்கிரஸ் தலைமை பீடத்தில் மாறுதலை ஏற்படுத்தும் சாத்தியத்தை உருவாக்கியுள்ளது.

திரு. ராஜீவ் காந்தி தொடர்நதும் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருப்பாரா அல்லது காங்கிரஸ் கட்சிக்குள் பெரும் பிளவு ஏற்படுமா? என 27-ம் திகதி நடைபெற இருக்கும் எட்டு சட்டமன்றத் தேர்தல்களுமே முடிவு செய்யும் என எதிர்பார்க்கப் படுகிறது. (சி)

## 750 இளைஞர்களுக்கு தொழில் வசதி

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் சுமார் 750 இளைஞர்கள் தொழில் வசதிகளை பெறவிருக்கிறார்கள். மேலும் 300 இளைஞர்களுக்கு மீன் பிடித்தல் இறால் வளர்த்தல், மாசிக் கருவாடு உற்பத்தி செய்தல் போன்ற துறைகளில் ஈடுபடுவதற்கு பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன. இத்திட்டத்தின்மூலம் வட, கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் சுமார் 14,000 இளைஞர்கள் நன்மையடைய விருக்கிறார்கள்

அரச சார்பற்ற நிறுவனங்களூடாகவே இத்தொழில் வசதிகள் கிடைக்கவிருக்கின்றன. இதுதொடர்பான பயிற்சிக் கரத்தரங்கு ஒன்று அம்பாறை கச்சேரியில் நடைபெற்றது. (க)

## பலஸ்தீனியப் பகுதியில்
# யூதர்கள் குடியேற்றத்தால் கொந்தளிப்பு நிலை

(ஜெருசலம்)

பலஸ்தீனியரின் தாயகப் பகுதியான மேற்கு கரையோரம், கிழக்கு ஜெருசெலம் பகுதிகளில் சோவியத்திலிருந்துவரும் ஆயிரக்கணக்கான யூதர்கள் குடியேற்றப்படுவதால் அங்கு பெரும் கொந்தளிப்பு நிலை உருவாகியுள்ளது.

சோவியத் யூனியனில் அண்மைக்காலங்களில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றம் அங்கிருந்து யூதர்களை இஸ்ரேலுககும் பலஸ்தீனிய பகுதிகளுக்கும் குடியேற தூண்டியுள்ளது. இதையடுத்து பலஸ்தீனிய தாயகப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான யூதர்கள் குடியேறிவருகிறார்கள்.

இந்நிலையை எதிர்த்து கடந்த வாரம் முதல் ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர் பெரும் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியுள்ளனர். இவர்கள் மீது இஸ்ரேல் இராணுவம் மேற்கொண்ட தாக்குதல்களில் பலர் கொலலப்பட்டுளனர். நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யூதர்களின் இந்நடவடிக்கையை உடன் நிறுத்துமாறும் பலஸ்தீனிய மக்களின் கோரிக்கைக்கு நடவடிக்கை எடுக்குமாறும் பலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யசிர் அரபாத் சோவியத்யூனியனுக்கும் அமெரிக்காவிற்கும், ஐ. நா. சபைக்கும் அவசர கடிதங்கள் அனுப்பியுள்ளார். (சி)

# அமெரிக்காவுடன் நிபந்தனையில்லாமல் உறவில் முன்னேற்றமில்லை
### நிக்கரகுவா அதிபர்

(மனகுவா)

அமெரிக்காவுடன் உடன்பாடு எதுவும் காணப்படாமல் உறவு நிலை சாத்தியமில்லை என நிக்கரகுவா அதிபர் திரு. டானியல் ஒக்டேகா தெரிவித்துள்ளார்.

தலைநகர் மனகுவாவில் நடைபெற்ற மாபெரும் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்:

அமெரிக்கா தொடர்ந்தும் நிக்கரகுவாவின் உள்விவகாரங்களில் தலையிட்டு வருகிறது. 'கொன்ரு' கிளர்ச்சியாளர்களுக்கு பெருமளவில் ஆயுத உதவிகளையும் மேற்கொள்கிறது. இந்நிலையில் அமெரிக்காவுடன் உறவு நிலைகளை மேம்படுத்துவது சாத்தியமில்லை.

நிக்கரகுவாவுடன் உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள அமெரிக்கா பல வழிகளிலும் முயன்று வருகிறது. ஆனால் அதன் தலையீடு எமது நாட்டின் இறைமைக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. இதுபற்றி நாம் அமெரிக்காவிற்கு பலதடவை தெரிவித்துள்ளோம் என்றும் கூறினார். (சி)

## வி.பி. சிங் தொப்பியை மாற்றினார்

[புதுடில்லி!

இந்தியப் பிரதமர் திரு. வி.பி. சிங் நீண்டகாலமாக அணிந்திருந்த மிருகத்தோலிலாலான தொப்பியை அமைச்சர் ஒருவரின் வற்புறுத்தலினால் மாற்றிக் கொண்டார்.

தற்போது அவர் எம்.ஜி.ஆர். அணிந்து வந்த தொப்பியை போல் பஞ்சினாலான தொப்பியை அணிகிறார்.

சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சர் திருமதி மேனகாகாந்தி பிரதமரை தோலினாலான தொப்பிமிருக வதையை நினைவூட்டும் என்பதால் அதனை மாற்றுமாறு கோரிக்கை விடுத்ததையடுத்து பிரதமர் தாமாகவே அதனை மாற்றியுள்ளார் (12)

# பாகிஸ்தானுக்கு அணுஆலை பிரான்ஸ் உதவும்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானுக்கு அணுசக்தி நிலையம் ஒன்றை நிறுவிக்கொடுக்க பிரான்ஸ் முன்வந்துள்ளதாக அதிபர் பிரான்கோஸ் மித்ரோன் தெரிவித்துள்ளார்.

அணுசக்தி விவகாரம் தொடர்பாக இருநாடுகளுக்குமிடையில் நீண்டகாலமாயிருந்து வரும் பிரச்னைக்கு இதன் மூலம் தீர்வு காணக்கூடியதாயிருக்குமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அமையும் அணுசகதிநிலையம் சர்வதேச பாதுகாப்பு விதிகளுக்கமைய செயற்படும். இதுவெளிநாட்டு கம்பனிகளுடன் கூட்டுமுயற்சி ஒன்றின் மூலம் பாகிஸ்தானில் அமைக்க பிரான்ஸ் கம்பனிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (சி)

## இராசி பலன்

23 - 2 - 1990

வெள்ளிக்கிழமை

திரயோதசி 5மணி 58நிமி; திருவோணம் அதிகாலை 4மணி 54 நிமி. வரை; மரணயோகம் இராகு காலம் காலை 11 மணி 01 நிமி. 12மணி 21நிமி. சுபகாரியங்களுக்கு விலக்கப்பட்டுள்ளது.

மேடம்: புதிய ஸ்தானம், பெரியோர் ஆசி, மகிழ்ச்சியானநிலை, குடும்பத்தில் குதூகலம்.

இடபம்: தொழில் பாதிப்பு, குடும்பக்கவலை, அந்நிய உதவி. மனக்குமுறல், அஞ்ஞான வாசம்.

மிதுனம்: வயிற்றில் ரோகம், கவலை தரும் விடயங்கள் எதிலும் பற்றின்மை, அலைச்சல் மிகுதி.

கடகம்: சென்ற இடத்தில் சிறப்பு, மனையில் சுபகாரியம், விருந்தினர் வருகை, பெண் நேசம்.

சிங்கம்: உறவு முறையில் முன்னேற்றம், பணவரவு, தொழில் உயர்ச்சி, தெய்வ அனுகூலம்.

கன்னி: கடன்படல், மன வேதனை. பகைவர் தொல்லை. துயரமான செய்தி, அதிகாரி வெறுப்பு.

துலாம்: நோய்வாட்டும். வைத்தியச் செலவு, குடும்ப கலகம், இனசனப்பகை, வாகன விபத்து.

விருச்சிகம்: தொழில் உறவு, முதலீடு அதிகரிப்பு, விருந்துபசாரம், மனச்சந்தோஷம், குடும்பச் சிறப்பு.

தனு: காரியத்தடை, தொழில்துறை சிக்கல், பணச் செலவு, மனவருத்தம், பகை.

மகரம்: நோய் தணியும், தொழில் லாபம், அதிகாரம், கடன் வசூல், பெண்வழி உதவி.

(5ம் பக்கம் பார்க்க)

## இன்று விசேட பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

திருக்கேதீஸ்வரத்தில் இன்று நடைபெறவுள்ள சிவராத்திரி விழாவை முன்னிட்டு வட பிராந்திய இ. போ. சபையினர் வடபகுதி யாத்திரிகர்களின் நன்மைகருதி விசேட பஸ் சேவையினை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

யாழ். நகரிலிருந்து கேரதீவுவரையும், சங்குப்பிட்டியிலிருந்து திருக்கேதீஸ்வரம் வரையும் இவ்விசேட இணைப்பு பஸ் சேவை நடாத்தப்பட உள்ளது.

இவ்விசேட பஸ் சேவை இன்றும் நாளையும் நடைபெறும். (க)

## ஹாட்லியின் நிறைவு விழா

(பருத்தித்துறை)

பருததித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 150 வது ஆண்டு விழா அண்மையில் நடைபெற்றது.

முதல் நாள் நிகழ்ச்சியில் இளைப்பாறிய கல்லூரி அதிபர் திரு. கே. பூரணம் பிள்ளை திருமதி பூரணம்பிள்ளை ஆகியோர் பிரதம விருந்தினராக பங்கு பற்றினார்கள். கல்லூரி அதிபர் திரு. பொ. பாலசிங்கம் தலைமை வகித்ததோடு பழைய மாணவரும், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தருமான பேராசிரியர் அ. துரைராசா அவர்களும் பங்கு பற்றினார்கள்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு சங்கத் தலைவர் உருத்திரா தலைமை தாங்கினார் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

தொடர்ந்து ஹாட்லி வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது. (52-எஸ்)

# தமிழ்மக்களின் விடிவிற்கான சமாதான வழியை ஆதரிப்போம் - சந்திரன்

(வவுனியா)

''தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானத்திற்கு எதிரானவர்கள் அல்ல. பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கையற்றவர்களுமல்ல. தமிழ் மக்களின் விடிவுக்காக மேற்கொள்ளப்படும் எந்த ஒரு சமாதான வழியையும் நாம் பூரணமாக ஆதரிப்போம். அதேவேளையில் ஏகாதிபத்திய சக்திகளின் தந்திரோபாயத்திற்கும் புலிகள் பலியாகிவிடப்போவதில்லை''.

மேற்கண்டவாறு வன்னிப் பிராந்திய அரசியல் பொறுப்பாளர் திரு. ஆர். சந்திரன் கோவில் புதுக்குளம் பாடசாலை வளவில் அண்மையில் விஜயன் தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போராட்டத்தில் மிகச் சிறந்த போராளிகளாகவும் அதேசமயத்தில் அரசியல் நிர்வாக முறைகளில் நாம் மாணவர்களாகவும் இருக்கிறோம். மிகவிரைவில் மிகச்சிறந்த ஒரு நிர்வாக அமைப்பை மக்களுக்கு வழங்குவோம்.

எமது போராட்டப் பாதையில் ஆயிரத்து முன்னூறுக்கும் மேற்பட்ட போராளிகளையும், இருபத்தையாயிரம் பொதுமக்களையும் இழந்துள்ளோம். எனினும் நாம் மனம் தளரவில்லை. உறுதியுடனும் நம்பிக்கையுடனும் இருக்கின்றோம்.

எமது தலைவர் பிரபாகரன் மக்களை நேரடியாகச் சந்திக்க வேண்டுமென்ற ஆவலுடன் உள்ளார். படைவிலகல் முடிந்ததும் விரைவில் மக்கள் முன் தோன்றுவார், 'வெகு விரைவில் மக்களை சந்திப்பேன்' என்று அவர் கூறியுள்ளார்.

திரு. விஜயன் உரையாற்றுகையில், 'கட்சி என்ற பெயரில் சிலர் ஆயுதங்களை வைத்துக்கொண்டு அண்மைக் காலத்தில் செயல் பட்டதைப் போல எமது கட்சி செயற்படாது. எமது கட்சி அரசியல் ரீதியிலும், அமைதி ரீதியிலும் நம்பிக்கை உள்ளது என்பதனை உலகின் முன்வைக்கவே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம்'.

இக்கூட்டத்தில் வேறு பலரும் உரையாற்றினர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பணிவாக்கு

வலிமை என்பது உடலின் பலத்தால் உண்டாவதன்று. அது மனத்துறுதியிலிருந்து உண்டாவதாகும்.

— மகாத்மா காந்தி.

## நமது நோக்கு

## தபால், தொலைத்தொடர்புச் சேவைகள் வேகமாகச் சீராக வேண்டும்!

ஒரு நாட்டின் சமுதாய பொருளாதார வளர்ச்சிக்குத் தபால், தொலைத்தொடர்புச் சேவைகள் மிக அவசியம்.

இன்றைய உலகில், தொழில்நுட்பத்தின் துரித வளர்ச்சி காரணமாக, உலகம் மிகச் சுருங்கி வந்துவிட்டது. உலகின் ஒரு பகுதியில் நடக்கும் நிகழ்ச்சிகளைச் சில நிமிடங்களுக்குள்ளேயே அடுத்த பகுதி மக்கள் அறிய வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது.

ஆனால் எமது நாட்டு நிலைமை என்ன? சிலவேளைகளில் லண்டன், பாரிஸ் நாட்டுச் செய்திகள் உடன் கிடைத்து விட்டாலும், அடுத்த கிராமத்துச் செய்தி கிடைப்பதற்கான தொலைபேசி வசதி கிடைக்க வழியில்லை.

வன்செயல்களாற் பாதிக்கப்பட்ட இச்சேவைககள் துரிதவளர்ச்சி காணவேண்டாமோ?

ஏனைய நாடுகள் கண்ட வளர்ச்சி இப்போதைக்குக் கிடையாவிடினும், இருந்த நிலையாவது மீண்டும் ஏற்படாதா என மக்கள் ஏங்குகிறார்கள்.

சில வாரங்களுக்கு முன்பு வரை கொழும்பு போன்ற பிற மாவட்டங்களிலிருந்து வரும் தபால்கள் வாரத்தில் மூன்று நாட்கள் தான் விநியோகிக்கப்பட்ட துர்ப்பாக்கிய நிலை இருந்து வந்துள்ளது.

ஆனால், இப்போது நிலைமை மாறிவிட்டது. மேலும் துரிதகதியில் வேலைகள் நடைபெற இருப்பதாக வடமாகாண தபால்திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்திருக்கிறார். இது ஒரு ஆறுதல் தரும் செய்தியாகும்.

அதிகாலையில் இங்கு கட்டும் தபால்கள் அன்று மாலைக்குள் மன்னாரில் விநியோகிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. பூநகரிப் பாதையாற் செல்லும் பஸ் வண்டிகள் மூலம் இது சாத்தியமாகின்றது.

வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு தினசரி இருமுறை தபால்கள் கட்டி, போக்குவரத்துச் சபை பஸ்கள் மூலம் அனுப்பவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே அடுத்த நாளே இம்மாவட்டங்களுக்குத் தபால்கள் செல்ல உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுபோலவே ஏனைய மாவட்டங்களுக்கும் அனுப்பிவைப்பதற்கு ஆவன செய்யப்படும் என நம்புகிறோம்.

யாழ்ப்பாணத்தின் தபாற் கந்தோரை மீண்டும் கட்டியெழுப்பும் பணி விரைவில் ஆரம்பிக்க முதற்கட்ட நிதி கிடைத்துள்ளது. தாமதங்கள் இன்றிவேலைகள்விரைவு படுத்தினால், மக்களின் பெருமளவு கஷ்டங்கள் நீங்கலாம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் முப்பத்தொரு தபாற் கந்தோர்கள் உள்ளன. இவற்றுள் பதின்மூன்று மாத்திரமே அரச கட்டடங்களில் இயங்குகின்றன. ஏனைய தனியார் கட்டடங்களில் இயங்குகின்றன.

இவற்றிற்கும் வசதியான அரச கட்டடங்களைக் கட்டம் கட்டமாக அமைத்து வந்தால், தபால்திணைக்கள ஊழியர் வசதிகளோடு பணியாற்ற முடியும்.

பல உபதபாற் சந்தோர்களில் தொலைபேசி வசதி இல்லை; அத்தியாவசியப் பாவிப்புக்காக திணைக்களங்கள் பல வற்றிலும் இந்த வசதி இல்லை.

இந்த வருடம் ஜூலை மாதத்திற்குள் யாழ். பகுதிக்கு ஐநூறு நேரடித் தொலைபேசிவசதிகிடைத்து விடும் எனப் பணிப்பாளர் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார்.

பொதுமக்களும் விழிப்பாக இருந்து கம்பித்திருட்டுப் போன்றவற்றால் தொலைத்தொடர்புச் சாதனங்கள் சேதமடைவதைத் தடுக்க முன்வரவேண்டும்.

அவசியத் தேவைகளுக்கான தொலைபேசிவசதிகளை முன்னுரிமை அடிப்படையில் வழங்குவதற்கு உடனடிக் கவனம் செலுத்தப்படவேண்டுமென்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

### இஸ்லாமிய சிந்தனை

## முஸ்லிம்களின் சிறந்த நாள்

வெள்ளிக்கிழமை தினம். முஸ்லிம்களாகிய ஏழைகளுக்கு ஹாஜ்ஜீடைய தினமாகும். வசதி படைத்தவர்களுக்கு ஒரு பெருநாள் தினமாகும். இந்நாளில் ஜூம் ஆவுக்காக நண்பகலுக்கு முன்பதாக குளித்துவிட்டு ஜூம்ஆவுக்கு செல்லக் கூடிய நல்லடியார்கள்மீது இவர்கள் வீட்டிலிருந்து பள்ளிக்கு நடந்து செல்லும் வழிகளில் மலக்குமார்கள் இவர்கள்மீது சலாம் கூறிக்கொண்டிருப்பார்கள். கட்டங்கட்டமாகப் பள்ளியில் நுழைந்து இரண்டு ரக் ஆத்துகள் பள்ளிக் காணிக்கைத் தொழுகையை தொழுதபின் ஜூம் ஆப் பிரசங்கம் ஆகும்வரை முன்வரிசையில் அமர்ந்து குர்ஆன் ஓதுவது சுபஹானல்லாஹ் கலிமா ஏனைய போன்ற நல் அம்சங்களை செய்து கொண்டிருப்பது முஸ்லிம்களின் கடமையாகும்.

— பௌஸ[illegible]

### இன்று மஹா சிவராத்திரிப் புனித தினமாகும்

# மங்கள மஹாசிவராத்திரியின் தத்துவம்

மாதந்தோறும் பல சிவராத்திரிகள் உண்டென்றாலும் மாசி மாதத்தில்வரும்கிருஷ்ண பக்கச் சதுர்த்தசியே மிக முக்கியமானது. அதுவே மஹா சிவராத்திரி நாளாகும்.

சிவராத்திரியின் ஆரம்ப காரணத்தை விளக்க சாஸ்திரங்களில் பல கதைகள் உள்ளன.

சிவபிரான் பரவசத்தினால் மற்றத்தெய்வங்களுடன் ஓர் தெய்வீக நிகழ்ச்சியில் முனிவர்களும் பங்குகொள்ளத்திரு நடனம் புரிந்தநாளே சிவராத்திரி என்பர். பாற்கடலில் தோன்றிய ஆலகால விஷமானது உலகிலுள்ள உயிர்களனைத்தையும் அழித்திடப்பயமுறுத்தியபோது முழு உலகும் சிவபிரானிடம் பிரார்த்தனை செய்தது. அந்தப் பிரார்த்தனைக்கு இரங்கிஅவ்விஷத்தை சிவபிரான் உட்கொண்ட போது அவருக்குத் தாங்கொணாத வெப்பம் ஏற்பட்டது. இதனால் 'கங்கை' சிவபிரானின் சடைமுடியின் மீது இடைவிடாது பொழியப்பட்டது. இதனை விளக்கவே அனைத்துச் சிவாலயங்களிலும் மணிக்கணக்கிலும் இடையறாமலும் அபிஷேகங்கள் நடைபெறுகின்றன. கங்கையுடன் குளிர்ந்த சந்திரனும் சடாமுடியில் வைக்கப்பட்டது குளிர்ந்த குருதியோட்டமுள்ள பாம்புகளும் அவருடைய கைகளிலும் கால்களிலும் சுற்றப்பட்டதுடன் சந்தனமும் பூசப்பட்டது. இவைகள் எல்லாம் வெப்பத்தை தணிக்காது போகவே பனிமலை அரசனின் மகளாகிய 'ஜகன் மாதா' பார்வதிதேவியே அவர் மடியில் அமர்ந்தார். இதனால் சிவபிரான் பார்வதிதேவியுடன் தாண்டவ நர்த்தனம் புரிந்தார் என்று புராணக் கதைகள் கூறுகின்றன. இவையனைத்தும் ஓர் குறிப்பிட்ட நாளில் நடைபெறவில்லையாதலால் அந்நாளை நினைப்பூட்டுவது சிவராத்திரி என்று கூற இயலாது.

ஒரு வேடுவன் வேட்டையாடும் பொருட்டு வில்வ மரத்தில் அமர்ந்திருந்து, கடவுள் வழிபாட்டில் எவ்வித சிந்தனையுமின்றி தன்னையறியாமலேயே வில்வம் இலைகளைப் பறித்துப்போட்டான். அவ்விலைகள் அம்மரத்தின் கீழமைந்திருந்த லிங்கத்தின்மீது விழுந்தன. இதன் பயனாக அவ்வேடுவன் முக்தியடைந்தானென்று ஓர் கதையுண்டு. அக்கதையானது அந்நாளின் முக்கியத்துவத்தைப் பற்றித்தான் விளக்குகிறது. ஆனால் அந்நாளின் ஆரம்பத்தை விளக்கவில்லை. அத்தோடு மஹாசிவராத்திரியுடன் மாதாந்த சிவராத்திரியும் சிவவழிபாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இந்த இரவின் தாற்பரியம் யாது? இரவு சந்திரனால் ஆட்கொள்ளப்பட்டது. சந்திரனுக்குப் பதினாறு பின்னங்கள் அதாவது கலைகளுண்டு. சந்திரன் ஒவ்வொரு நாளும் தேய்வுற ஒவ்வொரு பின்னம் அழிந்து அமாவாசை இரவன்று முற்றிலும் அழிகின்றது. பின்பு ஒவ்வொரு பின்னமாக சேர்க்கப்பட்டு பௌர்ணமி இரவன்று பூர்ணத்துவம் அடைகிறது. மனதின் அதிபதியான தெய்வம் சந்திரனே, சந்திரனுக்கும் மனதிற்கும் மிகவும் நெருங்கிய தொடர்புண்டு. தேய்வுக்கும் வளர்ச்சிக்கும் அவை இரண்டும் கீழ்ப்படிந்தவை. சந்திரனின் தேய்வு மனதின் தேய்வுக்கு அடையாளக்குறியாகும். மனது ஆசைகளின் மூட்டையாகும். ஆசைகளற்றபின் மனமில்லை. மனது வெற்றிகொள்ளப்பட்டு அழிக்கப்படவேண்டும்மனதைவென்றால்தான் அதுதன் சலனங்களாலும் நிலையற்ற போக்காலும் ஆன்மீக முன்னேற்றத்.

(5-ம் பக்கம் பார்க்க)

- "காந்தி" -

## சிவராத்திரி விரதம்

### குறள் வெண்பா

சிவராத் திரிவிரதம் சீராக நோற்போர்
பவப்பிணியைப் பற்றாரிப் பார்,

### விருத்தம்

தவப்பெரும் பேற்றைப் பெற்ற
சைவநற் றமிழர் மேலாம்
சிவனது பேற்றிற் கான
சிவநிசி நோன்பி ருந்து
சிவனிணை யடியை வேண்டின்
சீரிய ராக ஞான்றும்
பவப்பிணிக் காளா காமல்
பரன்பதம் பற்று வாரே!

— கவியரசு வெண்பாமணி
முருகசூரியன்

## சமயத்தை விளங்க வேண்டாமா?

### 1. சிவராத்திரியின் வரலாற்றுக் கதை என்ன?

பிரம்மாவும், விஷ்ணுவும் தங்களில் யார் பெரியர் என வாதித்தனர். நீண்ட காலம் சண்டை நீடித்தது. இவர்கள் கர்வத்தை அடக்க சிவபெருமான் அவர்கள் முன் அக்கினித் தம்பமாய் அடிமுடி தோன்றாது நின்றார். அப்போ இருவரும் யார் முதலில் அடியையோ, முடியையோ காண்பது அவரே பெரியர் எனச் கூறி உடன்பட்டு விஷ்ணு பன்றி வடிவெடுத்து அடியையும், பிரமா அன்னப்பட்சி வடிவில் முடியையும் தேடிச் சென்றனர். தேடியும் காணவில்லை. அப்போ சிவபெருமான் சோதிவடிவாய் நின்றார். இருவரையும் மன்னித்து அவர்களுக்கு அருள்பாலித்தார். இவ்வாறு லிங்கோற்ப மூர்த்தி வெளிப்பட்ட காலமே மகாசிவராத்திரியாகும்.

### 2. 'தாழம்பூ' ஏன் சிவபூஜைக்கு பயன்படுத்துவதில்லை?

பிரமன் அன்னப்பட்சி வடிவில் முடி தேடச்சென்றபோது முடிகண்டதாக பொய்ச்சாட்சி சொல்ல சாட்சி தேடினான். அவ்வேளை கைலாசத்தில் இருந்து வழுவிக் கீழே வந்த தாழம்பூவை தான் முடியைக் கண்டதாக பொய்ச்சாட்சி சொல்லும்படி இணங்க வைத்தான். விஷ்ணுவிடம் தாழம்பூ பொய்ச்சாட்சி சொல்லியது. பிரம்மா, விஷ்ணுவுக்கு காட்சியளித்த சிவபெருமான் ''தாழம்பூ சிவபூஜைக்குத் தள்ளப்படும்'' என தண்டனை விதித்தார். அன்றிலிருந்து சிவபூஜைக்கு தாழம்பூ பயன்படுத்துவதில்லை.

### 3. நான்கு சாமமும் செய்யும் பூசைக்குரிய அபிஷேகம், பத்திரம் எவை?

முதலாம் சாமம் பஞ்சகௌவியமும், இரண்டாம்சாமம் பஞ்சாமிர்தமும், மூன்றாம் சாமம் பாலோதகமும், நான்காம் சாமம் கந்தோதகமும் ஆகும்.

பத்திரங்கள் முறையே வில்பம், குருத்தை, கிளுவை, கருநொச்சியும் ஆகும்.

### 4. ஈழத்தில் சிவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்படும் தலம் எது?

திருக்கேதீச்சரம். இங்கு மிகவும் சிறப்பாக சிவராத்திரி கொண்டாடப்படுகிறது. பாலாவியில் நீராடி வெள்ளிக் குடத்தில் நீர் கொண்டுவந்து மகாலிங்கத்துக்கு தாமே அபிஷேகம் செய்யும் காட்சியும் காணலாம்.

தொகுப்பு: சி. கலையரசி

## பலதும் பத்தும்

### கேதீஸ்வரம்!

இன்று கேதீஸ்வரத்திற் பக்தர்கள் கூடுகிறார்கள் சிவராத்திரிக்காக!

வரலாற்றுப் புகழ் மிக்க, பாடல்பெற்ற சிவஸ்தலம் இது. இது புனிதஸ்தலமாக, வசதிகள் மிக்கதாக ஆக்கப்படவேண்டாமா?

முன்னுதாரணமாக முன்னேஸ்வரம் விளங்குகின்றது. இக்கோவிலின் முதற்கட்ட வேலையாக, சுற்றியிருந்த வீடுகளும் கடைகளும் அகற்றப்பட்டுள்ளன. அவர்களுக்கு வேறிடங்களில் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

இவ்வேலை ஏன், யாரால், எப்போது செய்யப்பட்டது? ஆனைமடுவில் 'கம்உதாவ' கொண்டாட்டம் 1988ல் நடைபெற்றதல்லவா? அந்த வேளையில், ஜனாதிபதியின் விசேட உத்தரவால், முன்னேஸ்வரத்திற்கும் நற்பேறு கிடைத்தது.

அங்கு இப்போது இரண்டாம் கட்ட வேலையாக, பிள்ளையார் கோவிலின் பின்பகுதி வயல் மண்போட்டு நிரப்பப்பட்டுவருகின்றது. எதற்காக? முன்னேஸ்வரக் கோவிலுக்கு வீதி அமைப்பதற்காக, அப்பகுதி நகர அபிவிருத்திச் சபை இவ்வேலையைச் செய்துவருகின்றது.

அப்பகுதி மாகாண முதல்வரும், அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவும் இவ்வேலைகளைப் பார்வையிட்டனர்.

வளர்ந்துவரும் நல்லெண்ணத்தைப் பயன்படுத்திக் கேதீஸ்வரத்திற்கும் வசதிகளைப் பெருக்க வேண்டாமோ?

வாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவில் நிர்வாகத் தடை இருந்தபோதிலும்
# கல்வி, போக்குவரத்து, உணவு விநியோகம்,
# மருத்துவ சேவைக்கு புலிகளின் ஆதரவு உண்டு

(தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இன்றைய நிலை பற்றியும் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் பற்றியும் எழுப்பப்படுகின்ற ஐயப்பாடுகளை தெளிவுபடுத்தும் நோக்கோடு தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு வெளியீடான 'தமிழீழம்' பத்திரிகையில் இடம்பெற்ற 'கேள்வி பதில்' என்ற பகுதியை இங்கு தருகின்றோம். 1989 நடுப்பகுதியிலிருந்து தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் வெளியான 'தமிழீழம்' பத்திரிகையில் பிரசுரமான பகுதிகளில் சில.) (ஆ—ர்)

கேள்வி: இந்திய அமைதிப் படை இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் அமைதியை நிலை நாட்டிவிட்டதாகவும், சிங்கள இராணுவம் இருக்கும் பகுதிகளில்தான் அமைதியின்மை நிலவுவதாகவும் சிங்களப் பகுதிகளில்தான் உணவு விநியோகம், கல்வி, போக்குவரத்து போன்ற அத்தியாவசியப் பணிகள் கூட நடைபெறாமல் நாடே செயலிழந்திருப்பதாகவும் இந்திய அரசு கூறிவருகிறதே?

பதில்: தமிழீழப் பகுதியில் சிவில் நிர்வாகத் தடையை மக்கள் பேராதரவுடன் விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வரும் போதிலும் கல்வி, போக்குவரத்து, உணவு விநியோகம் மருத்துவம் போன்ற மக்களின் அத்தியாவசிய சேவைகள் தடையின்றி செயற்பட விடுதலைப் புலிகள் முழு முயற்சி எடுத்து அதற்கு ஆதரவளித்து வருகிறார்கள். அதனால் தான் வடகிழக்கு பகுதிகளில் அரச செயலகங்கள் உட்பட ஏனைய பணிகள் எல்லாம் முற்றாக முடங்கிக் கிடக்கையில், — ராஜீவ் அரசின் குண்டு வீச்சுக்கள், ஷெல் தாக்குதல்கள், ஊரடங்கு உத்தரவுகள், துப்பாக்கிச்சூடுகள், அடக்குமுறைகள் இவற்றின் மத்தியிலும் - பாடசாலைகள், மருத்துவ மனைகள், போக்குவரத்துச் சேவைகள், உணவு விநியோகம் என்பன செயற்படுகின்றன.

தென்னிலங்கையில் ஜே.வி.பி. இயக்கம் செயற்படுவது போன்று மக்களிலிருந்து விலகி, மக்கள் அவதிப்படும் வகையில் தொடர்ச்சியான முழு அடைப்பை, பாடசாலை கல்லூரி பகிஷ்கரிப்புகளை, பொதுமக்கள் மத்தியில் குண்டு வெடிப்புகளை விடுதலைப் புலிகள் மேற்கொள்ளவில்லை.

அப்படியான போராட்டத்தை விடுதலைப் புலிகள் மேற்கொண்டிருந்தால் இன்று வடகிழக்குப் பகுதி தென்னிலங்கையைவிட மோசமான நிலையில்தான் இருந்திருக்கும். விடுதலைப் புலிகளும் தமிழீழ மக்களிடம் தாம் பெற்றிருக்கும் பெருமதிப்பை இழந்திருப்பர்.

ஆனால் வடகிழக்குப் பகுதியில் ராஜீவின் அரசும். படைகளும், எடுபிடிகளும் சுட்டிக் காட்டும் அமைதியும், இயல்பான நிலையும் விடுதலைப் புலிகளினாலேதான் ஏற்பட்டுள்ளதே தவிர ராஜீவின் படைகளினால் அல்ல என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும்

கேள்வி: ஈழத்திலுள்ள இந்தியத் துருப்புக்கள் திரும்புவதற்கு கால அவகாசம் தராமல் திடீரென்று பிரேமதாசா காலக்கெடு விதித்ததாக இந்திய அதிகாரிகள் கூறுகின்றார்களே?

பதில்: இந்தியப்படை ஜூலை 29ம் தேதிக்குள் திரும்ப வேண்டும் என்று ஜூன் 1-ம் தேதியே பிரேமதாசா கூறிவிட்டார். 59 நாட்கள் அவகாசம் கொடுத்திருந்தார். 1971-ல் பங்களாதேசுக்குள் புகுந்து பாகிஸ்தான் இராணுவத்துடன் சண்டையிட்டு தோல்வியுறச் செய்து சரணடைந்த 95,000 பாகிஸ்தானியப் படையினரையும் அழைத்துக்கொண்டு 14 நாட்களுக்குள் திரும்பிய இந்தியப் படை ஈழத்திலிருந்து திரும்ப 59 நாட்கள் போதாது என்று சொல்வது நொண்டிச் சாட்டே தவிர வேறெதுவுமல்ல.

கேள்வி: இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைதன்னிச்சையாக செயற்படுத்தப் போவதாக இந்திய அரசு கூறுவது நியாயமா?

பதில்: இந்த ஒப்பந்தம் ஈழத்தமிழர்களுக்கு பயன் தராது என்பதை நன்கு உணர்ந்த போதிலும் ராஜீவ் காந்தியின் வேண்டுகோளுக்கு மதிப்பும், அவரது முயற்சிக்கு சந்தர்ப்பமும் அளித்து ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்புக் கொடுப்பதாக ஒப்புக்கொண்ட விடுதலைப் புலிகள், ஸ்ரீலங்கா அரசின் ஒப்பந்த மீறல்களை பலதடவைகளில் சுட்டிக்காட்டியபோதிலும். இலங்கை அரசின் மீறல்களைத் தடுக்கும் அதிகாரம் தமக்கு இல்லை என்று கைவிரித்த இந்தியப்படை இன்று இலங்கை அதிபர் பிரேமதாசா வெளியே போ என்று கூறியதும் ''விட்டேனா பார் ஒப்பந்தத்தை நிறைவேற்றியே தீருவேன்'' என்று துள்ளிக்குதிக்கிறது. 1986-ல் பெங்களூருக்கு அழைத்த போது விடுதலைப் புலிகள்தான் பெரிய இயக்கம் மற்றவையெல்லாம் பொருட்படுத்தக் கூடிய அளவு பெரியன அல்ல என்று கூறிய இந்திய அரசு அந்தப்பெரிய இயக்கமான விடுதலைப் புலிகள் சுட்டிக்காட்டிய சிறீலங்கா அரசின் ஒப்பந்த மீறல்களை அப்போதே தட்டிக்கேட்டிருந்தால் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பைப் பெற்றிருக்கலாம். ராஜீவ் காந்தியின் வரட்டுப் பிடிவாதத்தாலும், பழிவாங்கும் போக்காலும் அநியாயமாக 2500 இந்தியப்படையினர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 600விடுதலைப் புலிகளையும் 5000-த்துக்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்களையும் கொன்றவர்கள் என்ற அவப்பெயரும் உலக அரங்கில் இந்திய இராணுவத்துக்கு ஏற்பட்டிருக்காது.

கேள்வி; இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றி சர்வதேச மன்னிப்புச்சபை (Amnesty International) ஒருதலைப்பட்சமாக இந்தியாவைத் தாக்குவதற்காகத் திட்டமிட்டு அறிக்கை தயாரித்திருப்பதாகவும் அதில் ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றியும். விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல்கள் பற்றியும் எதுவுமே கூறப்படவில்லை என்று வரதராஜப்பெருமாள் கூறியதை இந்தியத் தொலைக்காட்சி பல தடவைகளில் ஒளி பரப்பியதே இதுபற்றி என்ன கூறுகிறீர்கள்;

பதில்; சர்வதேச மன்னிப்புச்சபை கடந்த மே மாதம் வெளியிட்ட அதன் அறிக்கை இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களைப் பற்றித்தான் அதிகமாகக் கூறியுள்ளது. அதுவெளியிட்ட 43பக்க அறிக்கையில் 26 பக்கங்களில் மனித உரிமை மீறல் பற்றிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கிறது.

அதில் 11 பக்கங்கள்தான் இந்தியப்படையினதும், பெருமாளின் படையினதும், மனித உரிமை மீறல்களைச் சுட்டிக் காட்டியிருக்கிறது. மீதிப்பக்கங்களில் ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமை மீறல்களையே குறிப்பிட்டுள்ளது. இதை மூடி மறைத்த வரதராஜப் பெருமாள் இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள்பற்றி அந்த அறிக்கையில் எதுவுமே தெரிவிக்கப்படவில்லை என்றும் அந்த அறிக்கை ஒருதலைப்பட்சமானது என்றும் கதையளந்திருக்கிறார்.

கேள்வி: ஈழத் தமிழர்களுக்கு, மாகாண அரசுக்கு அதிகாரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக இலங்கை அரசை இந்தியஅரசு அக்கறையுடனும் கண்டிப்புடனும் வற்புறுத்தி வருவதாகச் செய்திகள் வருகின்றனவே?

பதில்: ஒப்பந்தத்தில்குறிப்பிட்டுள்ளபடி அதிகாரங்களைக் கொடு என்று அன்றே இலங்கை அரசை இந்திய அரசு வற்புறுத்தியிருந்தால் குமரப்பா, புலேந்திரன் உட்பட 17 விடுதலைப்புலி வீரர்களை இலங்கை அரசு கொழும்புக்கு கொண்டுசெல்ல எடுத்த முயற்சியை ஒப்பந்தத்துக்கு மீறிய செயல் எனக் கூறி அன்றே இந்திய அரசு தடுத்து நிறுத்தியிருந்தால் இலங்கை அரசு வழிக்கு வந்திருக்கும்.

அதைவிட்டுவிட்டு அன்று ஒப்பந்தப்படி பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட குமரப்பா, புலேந்திரன் மற்றும் 15 வீரர்களை ஒப்பந்தத்தை மீறி இலங்கை அரசு கொழும்புக்கு கொண்டுசெல்ல முயன்ற போது அதைத்தடுத்து நிறுத்தும் அதிகாரம் தனக்கு இல்லை என்று இந்தியப்படை கைவிரித்தது.

அதேபோல ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு தமிழீழப் பகுதிக்கு இந்தியப்படை வந்ததன்பின் அதற்கு முன்பெல்லாம் இல்லாத அளவில் சிங்களக் குடியேற்றங்களை தமிழ் பகுதிக்குள் இலங்கை அரசு திட்டமிட்டு ஏற்படுத்திய போது அதைத் தடுத்து நிறுத்தும் வேலை தங்களுக்கு வழங்கப்படவில்லை. அதற்கான அதிகாரங்கள் தம்மிடமில்லை என்று இந்தியப்படை கைவிரித்தது.

ஒப்பந்தத்தின்படி போராளிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைகிறோம் என்று கூறி 600 விடுதலைப் புலிகளையும் 5000-ச்கும் அதிகமான தமிழ் மக்களையும் கொன்ற இந்திய அரசும் அதன் படைகளும், கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ் மக்களுக்கு எந்த உரிமையையும் பெற்றுத்தரவில்லை; பெற்றுத்தர முயற்சிக்கவுமில்லை. மாறாகஒப்பந்தத்தின் பின் தமிழ் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம், சிங்கள பொலிஸ் நிலையம் என்பன ஏற்படுத்தப்பட்டன. அதைக்கூட இதுவரை நிறுத்த முன்வராத இந்திய அரசு. ஒப்பந்தத்தின்படி அதிகாரங்களைப் பெற்றுக்கொடு என்று தமிழ்நாட்டுத் தமிழர்கள் இடித்துரைத்தபோதெல்லாம் ஈழத்தமிழருக்கு எல்லா அதிகாரங்களையும் பெற்றுக் கொடுத்துவிட்டோம் என்று கூறிவந்தது இந்திய அரசு.

இலங்கை அரசு, ''அமைதிப்படையைத்திருப்பி அழை' என்று கூறியதும் ஒப்பந்தப்படி எந்த அதிகாரங்களையும் இலங்கை அரசு தமிழர்களுக்குக்கொடுக்கவில்லை. அதைக் கொடுத்த பின்புதான் அமைதிப்படையை திருப்பி அழைப்பேன்'' என்று கூறி ஈழத்தமிழர்களின் இரட்சகன் போல கூறியது.

---

## இராசிபலன்

(௦-ம் பக்கத் தொடர்ச்சி)

கும்பம்: கடும்போக்கு, தாய்வழி நினைவு, அந்நியர் தொல்லை, போராட்டம், தொழில் பாதிப்பு.

மீனம்: தொழில் உயர்வு, பணப்புழக்கம், நாகரிகமான செயல், குடும்பசுகம், பிரயாணம்.

---

## இன்று மஹா

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தைத் தடைசெய்யாது. மனதை அடக்கிக் களைந்து அழிக்கவேண்டும். சாதனைகள் அனைத்தும் இம்முடிவிற்கே விழைகின்றன. மனம் கொல்லப்பட்டால் மாயை கிழித்தெறியப்பட்டு உண்மை துலங்கும்

மாதத்தின் இருண்ட பாதிக் காலத்தில் ஒவ்வொரு நாளிலும் சந்திரனும் அதனையொத்த மனிதனின் மனமும் தேய்ந்து ஒருசிறு பாகம் குறைகிறது. இதனால் அதன்சக்தி குறைந்துகொண்டேயிருக்கும் முடிவில் சதுர்த்தசியன்று மிகவும் நுண்ணியபகுதியே எஞ்சி நிற்கின்றது.

மனிதன் அச்சதுர்த்தசியன்று சிறிதளவு அதிகமாக முயற்சி செய்வானாகில் அந்த மனத்தின் நுண்ணிய உழைப்பால் எஞ்சிநிற்கும் அச்சிறு பகுதியும் ஒழியும். இதன் பயனாக மனிதன் மனோ நிக்ரகத்தில் பூர்ணத்துவமடைய முடியும். இதனால்தான் சதுர்த்தசி 'சிவராத்திரி' எனக்கூறப்படுகிறது. அன்றிரவு முழுவதும் நாம் ஜெபத்திலும் தியானத்திலும் உணவு உறக்கம் என்ற எண்ணங்களில்லாமல் கழிக்க வேண்டும். உறக்கமில்லாமல் இருக்கவேண்டுமென்பது ஒருவன் ஆன்மீக முன்னேற்றத்தில் விழிப்பாக இருக்கவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டும் சின்னம். அதேபோல உண்ணாமலிருக்கவேண்டுமென்பது புலனடக்கத்தின் அடையாளம்.

மகாசிவராத்திரி இரவன்று மனதாகிய மாசுதனையகற்றி சவஉடலைச் சிவமாக்க விஷேச முயற்சியுடன் சாதனைபுரிய வேண்டுமென உபதேசிக்கிறார்கள். இதுவே சிவராத்திரியின் நோக்கமாகும்.

---

## விதவைப் பெண்களுக்கு
# தையல் பயிற்சி
### இயந்திரமும் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

அகதிகளுக்கான புனர்வாழ்வு நிறுவனம் வலிகாமம் மேற்கு, தென்மேற்கு வடக்கு ஆகிய பகுதிகளில் வன்செயல்கள் காரணமாக கணவன்மார்களை இழந்த பன்னிரெண்டு விதவைப்பெண்களுக்கு தையல்பயிற்சிகளை வழங்கி உபகரணங்களை வழங்கமுடிவு செய்துள்ளது.

இவர்களுக்கான பயிற்சிகளை வழங்க சித்தங்கேணியில்நிலையமொன்றை அமைக்க ஒழுங்குகளைச் செய்துள்ளனர். இப்பெண்களுக்கு மூன்று மாத பயிற்சியின் பின்னர்ஒவ்வொருவருக்கும் பன்னீராயிரம் ரூபா பெறுமதியான தையல்யந்திரமும் உபகரணங்களும் வழங்கப்படும். மேற்படி தகவல்களை அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உபதலைவர் திரு. அ. நல்லதம்பி தெரிவித்தார். (12)

---

## வலிகாமம் மேற்கைச் சேர்ந்த
# 903 குடும்பங்களுக்கு
# 25-ம் திகதி நிவாரணம்

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஏழு கிராமசேவை அலுவலர் பிரிவைச் சேர்ந்த 903 குடும்பங்களுக்கு உற்பத்தி முயற்சி நன்கொடை, கமத்தொழிலாளர் களுக்கான நிவாரணம் 4000 ரூபா 25ம் தேதி ஞாயிற்றுக்கிழமை வழங்கப்படவுள்ளது.

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவிலுள்ள வட்டு கிழக்கு கி. சே. அ. பிரிவைச்சேர்ந்த 122 குடும்பங்களுக்கும் வட்டுமேற்கு கி. சே. அ. பிரிவைச்சேர்ந்த 32 குடும்பங்களுக்கும் சங்கரத்தை கி. சே. அ. பிரிவைச்சேர்ந்த 73 குடும்பங்களுக்கும், சுழிபுரம் கிழக்கு கி. சே. அ. பிரிவைச் சேந்த 213 குடும்பங்களுக்கும் சங்கானை தெற்கு கி. சே. அ. பிரிவைச்சேர்ந்த 70 குடும்பங்களுக்கும் சங்கானை கிழக்கு கி. சே. அ. பிரிவைச் சேர்ந்த 246 குடும்பங்களுக்கு வட்டு தெற்கு கி. சே. அ. பிரிவைச்சேர்ந்த 147 குடும்பங்களுக்கும் மொத்தமாக 903 குடும்பங்களுக்கும் ரூபா 4000 கமத்தொழில் நன்கொடை நிவாரணம் யாழ். கன்னாதிட்டியிலுள்ள மக்கள் வங்கியில் ஞாயிற்றுக்கிழமை காலை வழங்கப்படவுள்ளது.

கமத்தொழிலுக்கான நிவாரணத்தை பெறுவதற்கு சிபார்சு செய்யப்பட்டவர்கள் வங்கிக்கு போவதற்கு முன்னர் நிவாரணத்துக்கு பொறுப்பான அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (137)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடெங்கும் ஓடி ஒளித்தாலும் ஏழரையால் ஆட்சிசெய்பவன் - சனி!

ஒருவருடைய ஜாதகத்தில் அதிஸ்டத்தையும் ஆயுளையும் குறிக்கவல்லவர் சனிக்கிரகம் தான். எந்தக்கிரகமும் செய்ய முடியாத செயலை சனி ஒருவனுல்தான் செய்யமுடியும்.

ஒரேநேரத்தில் ஏழெட்டுப் பேருக்கு சரியான பதிலை சொல்லி சமாளிக்கும் ஆற்றலையுடையவர்களுக்கு அஷ்டாவதானி என்று பெயர். இந்தஆற்றல் கவியரசு கண்ணதாசனுக்கு இருந்தது. இந்த வல்லமைக்கு காரணமாக இருந்தவர் சனிபகவானே யாகும்.

ஒரு ஜாதகத்தில் சனிபகவான் உச்சமாகவோ, ஆட்சியாகவோ அமர்ந்திருந்தால் அந்தஜாதகர் அதிக போகங்களை அடைவார். ஆனுல் நீசமாக அமைந்திருந்தால் கஷ்ட பலன்களையே அடைவார்கள்.

சனி நீஸமாகி இருந்து ஒருவருக்கு சனிதிசை நடக்கும்போது, கெட்ட மனிதரது சகவாசமும் அதிக அலைச்சலுமுண்டு நீதிமன்றம், சிறைச்சாலைகளைச் சந்திக்கவேண்டியிருக்கும்.

எப்பொழுதும் சனிபகவான் இராசிச் சக்கரத்தில் துலாமில் இருந்து மேலும் செல்லும் காலம்தான் ஆற்றல் உள்ளவர்களுக்கு நல்வாழ்வைத் தந்து மகிழ்ச்சியடையச் செய்கிருர்.

### பயங்கரமானது

வான வீதியில் சஞ்சரிக்கும் எந்தக் கோள்களுக்கும் விஞ்ஞானிகள் ஆய்வுநடாத்தி வரலாம். ஆனுல் சனிக்கிரகத்திற்கு அவ்வாறு செய்யமுடியாது. காரணம் சனிக்கிரகத்தைச் சுற்றி எப்போதும் ஒரு வளையம் சுற்றிக்கொண்டேயிருக்கும். அந்த வளையத்தைச் சுற்றி எவரும் போகமுடியாது.

1973-ல் அமெரிக்க விஞ்ஞானிகள் பயனியர் II என்ற விண்கலத்தை சனிக்கிரகம் நோக்கி அனுப்பிவைத்தனர். அது வழி நெடுகிலும் உள்ள நிலையை மட்டும் பதிவாக்கி பூமிக்கு அனுப்பிவருகிறதேயொழிய சனிக்கிரகத்தை அண்ட முடியவில்லை. இப்பதிவுகளில் சனிக்கிரகத்தில் ஹைதரஜன், மீதேன், அமோனியா வாயுக்கள் உள்ளதாக தெரிவிக்கின்றன. இக்கிரகத்தில் இருந்து 'மாரிஷ்' என்ற விஷப்புகை வெளிவந்து கொண்டு இருப்பதால் இதனை அண்டமுடியாது. இக்கிரகத்தில் இருந்துவரும் தூசு பட்டாலும் விண்வெளிக்கலம் சுக்குநூருக உடைந்துவிடுமென விஞ்ஞானிகள் கூறுகிருர்கள்.

### சனிபற்றிய பலாபலன்கள்

லக்கினத்தில் சனிஇருந்தால் நீர்சம்பந்தமான ரோகங்கள் வரும். ஊளைச்சதை உடலைப் பருமனுகக்காட்டும். இருமல், தலைவலி, ஆஸ்துமா, புரூங்கைஹட்டீஸ் நோய்களுக்கு சனி லக்கினத்தில் இருப்பதுதான் காரணம்.

இரண்டில் சனியிருந்தால் குடும்பத்தில் அமைதி இராது. பேச்சில் தாழ்வான குணமிருக்கும்.

மூன்றில் சனி இருந்தால் துணிச்சலுள்ளவர்கள், சட்டத்தின் பிடியில் சிக்காமல் பாவமான தொழில் செய்வர்.

நான்கில் சனி இருந்தால் இல்லற சுகத்தை குறைத்துவிடுவான். தாயாரைப பாதிக்கும், தலைப்பிள்ளை தவறிவிடும்.

ஐந்தில் சனி இருந்தால் தந்தையின் சொத்து கரைந்து போகும். இளமையில் வறுமையைச் சந்திப்பீர்கள்.

ஆறில் சனியிருந்தால் எதிரிகளை வென்றுவிடும் யோகம் இருக்கும். ராஜயோகம்.

ஏழில் சனியிருந்தால் திருமணவாழ்க்கை பாதிக்கும். குடும்பத்தில் நிம்மதி குன்றிவிடும்.

எட்டில் சனியிருந்தால் அதிக கெடுதியைச் செய்ய மாட்டான். ஆனுல் வலிமை குன்றினுல் படாதபாடு படுத்திவிடுவார்.

ஒன்பதில் சனி தந்தையைப் பாதிக்கும். அதிஷ்ட வாய்ப்புகள் பாதிக்கும்.

பத்தில் சனி தொழில் வாய்ப்பு பெருகும். கறுப்பு சம்பந்தமான பொருள் வியாபாரத்தால் லாபமுண்டு.

பதினென்றில் சனி அதிக லாபத்தைக் கொடுப்பான். மனதுக்கு நிம்மதியளிப்பான்.

## - ஸச்ஃபி -

பன்னிரெண்டில் சனி வாழ்க்கையின் முறபகுதி வறுமையிலேயே உழன்றுகொண்டிருக்கும். இவ்வாறு சிறப்புப்பெற்ற சனியை பலஞானிகள் கவிதைகளால் வர்ணஜாலம் செய்து சிறப்பித்துள்ளனர். நவக்கோள் நல்லாரம் என்றும் கோள்மாலையில் ஓர் இடத்தில் ''நாடெங்கும் ஓடியொழிதத லும் ஏழரையால ஆட்சி செய்வோன்'' என பாடுகிருர்.

இனி இராசிபலன்களை நோக்குவாம்.

### மகரம்

உத்தராடம் 2, 3, 4, ம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2ம் பாதங்கள் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு)

இவ்விராசியினருக்கு சனி பகவான் ஜென்மராசியென்னும் லக்கினத்தில் சஞ்சரிப்பார். அங்கிருந்து 3, 7, 10-ம் பார்வையாக 3, 7, 10-ம் வீடுகளைப் பார்க்கிருர். இதனுல் குடும்பத்தில் கடந்த இரண்டரை வருடங்களாக நிலவிய பூசல்கள் குறையும். தொழிலில் போதிய லாபம் கிட்டும். வருமானம் அதிகரிக்கும். சகோதரருக்கு உதவிசெய்ய வேண்டிவரும். போக்குவரவு செலவுகள் கட்டுக்கடங்காமல் இருக்கும். உடல்நலனில் சிறுசிறு தொந்தரவு இருந்துவரும். மருத்துவ அதிகரிக்கும். வராக்கடன் என ஒதுக்கப்பட்ட தொகையும், பழைய பாக்கிகளும் தாமதமின்றி வந்துசேரும். வேலைப்பளு அதிகரிக்கும்.

திருமணமாகாதவர்களுக்கு திருமணப்பேச்சுக்கள்கூடிவரும் வீடு மனைவாங்குவதற்கான யோகம் உண்டு. தாயாரின் உடல்நிலை பாதிப்புற இடமுண்டு, வெளிநாட்டுப் பயணங்கள் கைகூடும். தொழில் துறைகளில் முன்னேற்றமும், பணியாட்கள் ஒத்துழைப்பும் கிட்டும். ஜென்ம ராகுவும், ஜென்ம சனியும் இருப்பதால் புதிய முதலீடுகள் அதிகலாபத்தைத்தரும்

#### தொழிலாளர்களுக்கு

தொழில்துறைகளில் பதவி உயர்வும் இடமாற்றமும் உண்டு தொழில்நிமித்தம் பணவரவும், புதிய சிந்தனையும் உருவாகும். நீண்டநாள் தாமதமான சம்பள உயர்வு கிட்டும், தொழில்கொள்வோரிடம் உறவுமுறையில் முன்னேற்றமுண்டு, புதியமுதலீடுகள் லாபந்தராது.

#### வியாபாரிகளுக்கு

தொழிலில் அதிக உழைப்பு இருக்கும், முதலீடுகள் அதிகரிக்கும், தொழிலாளர் ஒற்றுமைமிகுந்துகாணும். பொருளாதாரநிலை மேமபடும், வசதி கூடியவர்கள் பங்காளிகளாக இணைந்துகொள்வர், தொழில் முன்னேற்றமுண்டு.

#### பெண்களுக்கு

பெண்களுக்கு மகிழ்ச்சி நிலவும். திருமணமாகாதவர்களுக்கு ஏற்ற மணாளனைக் கிட்டுவார். தொழில் துறைகளில் ஏற்றமும் புதிய பதவியும் கிட்டும். நீண்ட நாளைய உறவு திருமணத்தில் முடிவுறும். பொருளாதாரத்துறை ஏற்றமடையும்.

#### மாணவர்களுக்கு

மாணவர்களுக்கு உயர்ச்சியைத் தரும்காலம். நேர்முகப் பரீட்சைகளில் சித்தியுண்டு; எதிர்பார்த்த உதவிகள் கிட்டும். புலமைப் பரிசில்கள் கைக்கெட்டிச் சிலர் வெளிநாடு செல்லும் யோகம் காணப்படுகிறது. சகோதர உதவியுண்டு. கல்வியில் பங்கம் இராது.

### கும்பம்

(அவிட்டம் 3, 4ம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதங்கள் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு)

இவ்விராசியாளருக்கு சனி பகவான் விரயஸ்தானமாகிய 12ம் இடத்துக்கு வருகின்ருர். இதில் இருந்துகொண்டு 3. 7, 10ம் பார்வையாளராக 2, 6, 8ம் வீடுகளை நோக்குகின்ருர். இவ்விராசியாளர்களுக்கு கவலைகள் அதிகரிக்கும். செலவுகள் அதிகரிக்கும். மறைமுகமான எதிரிகள் தொல்லை இருந்துவரும். தொழிலில் முன்னைவிட துணிவும், செல்வாக்கும் அதிகரிக்கும். உறவினர் தொல்லை இருந்துவரும்,

மூத்த சகோதரரால் குடும்ப விடயங்களில் பணச் செலவு உண்டு. புத்திரப்பேறு கிட்டும். பூர்வீகச் சொத்தில் இருந்துவந்த துனபங்கள் நீங்கி மகிழ்ச்சி நிலவும். ஆடம்பரச் செலவுகள் கட்டிலடங்கா. புதிய வாகனங்கள் வாங்குவதற்கானமுயற்சிகள் கைகூடும்,

உடல்நிலை பாதிக்கும். அதனுல் வைத்தியச் செலவுகள் அதிகரிக்கும். தெய்வீக யாத்திரை செய்ய வாய்ப்புண்டு. குடும்பத்தில் பட்டும்படாமலும் உறவு இருக்கும். திருமணமாகாதவர்களுக்குத் திருமண யோகமுண்டு. காணி சம்பந்தமான பிரச்சனைகள் நாட்பட்டுக கொண்டே போகும். அதிர்ஷ்ட பலன்கள் குறைவு.

#### தொழிலாளர்களுக்கு

இவ்விராசியாளருக்குத் தொழில்துறைகளில் அதிக வேலைப்பளு இருந்துவரும். புதிய முதலீடுகள் செலவுகளைத் தோற்றுவிக்கும். லாபம் அதிகரிக்கும் தொழில் பிரச்சனைகள் சுமுகமாகத் தீரும். பதவி மாற்றங்களும் அலைச்சலும் உண்டு.

#### வியாபாரிகளுக்கு

தொழிலில் இருந்துவந்த கஷ்டங்கள் ஓரளவுக்கு அகலும். அரசின் கெடுபிடி மேலும் அதிகரிக்கும். பணியாளர்கள் ஒத்துழைப்பு நல்குவர். சொத்துக்களில் இருந்துவந்த பிரச்சனை சுமுகமாகத் தீரும்.

#### பெண்களுக்கு

திருமணமாகாத பெண்களுக்குத் சுப திருமணங்கள் கைகூடும். பொருள் வளம் பெருகும். தொழில் பார்க்கும் பெண்களுக்கு பதவி உயர்வும் நிலையான சம்பள உயர்வும் உண்டு, காணிகளை வாங்க முயற்சி செய்வீர்கள். புத்திர பாக்கியத்திற்குப் பிரார்த்தனை, வேண்டுதல்கோரி அலையாதீர்.

#### மாணவர்களுக்கு

கல்வியில் முன்னேற்றம் உண்டு. உயர் கல்வி வாய்ப்புகள் உருவாகும். கேளிக்கை அதிகரிக்கும். கல்வி சம்பந்தமான பயணங்கள் நன்மை தரும். பெரியோர் உதவியுண்டு. பொதுப் பணிகள் அதிகரிக்கும்.

### மீனம்

(பூரட்டாதி 4ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு)

இவர்களுக்கு சனிபகவான் லாபஸ்தானமான 11ம் இடத்திலிருந்து 3,7,10ம் பார்வையாக 1, 5, 8ம் இடங்களைப் பார்க்கிருர். இதனுல் குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் உண்டு. திருமணமாகாதவர்களுக்கு அதற்கான யோகமுண்டு. உடல்நிலையில் இருந்துவந்த சங்கடங்கள் குறையும். வேலைவாய்ப்பு, இடம்விட்டு இடம் பெயர்தல், வாகனலாபம் என்பன கிட்டும். பொருளாதாரநிலை உயரும். வாக்குறுதிகள் சங்கடங்களைத் தோற்றுவிக்கும், தந்தை. சகோதர சகோதரிகளுடன் வாக்குவாதங்களைத் தோற்றுவிக்கும். சொத்துக்களில் பாகப் பிரிவினையும், குடும்பத்தில் திடீரென பிரிவும் நிகழலாம். திருமணமாகாதவர்களுக்குத் திடீரெனத் திருமணப் பேச்சுக்கள் நாடிவரும், தொழிலில் அதிகனேற்றமுண்டு. நீர்த்தொழில் செய்பவர்கள் கூடியளவு எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நலம்.

#### தொழிலாளர்களுக்கு

தொழிலாளர்களுக்கு தொழில் செய்யுமிடத்தில பதவி மாற்றங்களும் இடமாற்றங்களுமுணடு. எதிர்பாராத உதவி கிட்டும், போட்டி மனப்பான்மை அகலும் தடைப்பட்டிருந்த சம்பள நிலுவைகள் கைக்கு கிட்டும். அதிகாரிகளின் பாராட்டுண்டு அரசமானியங்கள் கிட்டும்.

#### வியாபாரிகளுக்கு

தொழிலில் உயர்வுண்டு, அதிகலாபமும், பொருட்களின் விலையுயர்வும் காணப்படும் தொழிலாளர் பிரச்னையிருப்பினும் சாதுரியமாகத் தீர்க்கப்படும். முதலீடுகள் நல்லவாய்ப்பைத்தரும். வெளிநாடுகளில் இருந்து நல்ல செய்திகிட்டும்.

#### பெண்களுக்கு

திருமணமாகாதவர் களுக்கு சுலபமாக திருமணம் கைகூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழில் பார்ப்போர்க்குரிய இடமாற்றம் கிட்டும் சுபமங்களகரமான கருமங்கள் நிகழும் சகோதர பகைமை அகலும்.

(7ம் பக்கம் பார்க்க)

---

### பருத்தித்துறை வைத்தியசாலை

## பற்றுக்குறை, சீர்கேடுகளை உடன் நீக்குமாறு அமைச்சர் உத்தரவு

### புதிய 'எக்ஸ்ரே' கருவியும் வழங்கப்படும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நிலவும் பற்றுக்குறைகள் சீர்கேடுகளை உடன் நீக்க நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்ட சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹெரத் ரணவீர இவ் வைத்தியசாலையில்நோயாளர்களுக்குப் பாதிப்பேற்படும் வகையிலும், ஒழுங்கீனமாகவும் நடந்து கொள்ளும் ஊழியர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வைத்தியசாலைமாவட்ட வைத்திய அதிகாரிக்கு கண்டிப்பான உத்தரவும் பிறப்பித்துள்ளார்.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் கடந்த திங்கட்கிழமை வைத்தியசாலையின் பற்றுக்குறைகள், சீர்கேடுகள் பற்றி சுகாதார, மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹெரத் ரணவீரவை அவரது அமைச்சில் அமைச்சரின் அழைப்பின் பேரில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். கடந்த டிசம்பர் 20ம் தேதி யாழ். சுகாதார சேவைகள் அத்தியட்சகர். திரு. என். கனகசபையுடன் கலந்துரையாடியபோது சுகாதார சேவைகள் அத்தியட்சகர் உறுதி கூறிச்சென்ற எந்த நடவடிக்கையும் செயற்படுத்தப்படாமையினலேயே வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர். சுகாதார அமைச்சரைச் சந்திக்கக் கோரிக்கை விடுத்திருந்தனர் அமைச்சர் கோரிக்கையையேற்று அபிவிருத்திச்சபையினரை அழைத்திருந்தார். சுகாதார மகளிர் விவகார அமைச்சில் பேச்சுவார்த்தைகள் சுமார் 1½மணித்தியாலங்களுக்கு மேல் நடைபெற்றது.

அமைச்சரைச் சந்திக்க வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத்தலைவரும், மாவட்ட வைத்திய அதிகாரியுமான டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் சென்ற தூதுக்கோஷ்டியில் பருத்தித்துறை பிரஜைகள் குழுத்தலைவர் திரு. எஸ். விசாகசுந்தரம் வைத்தியசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு. கே. வி. செல்வராஜன் உதவிச் செயலாளர்களான திரு. ஏ. என். எஸ். திருச்செல்வம், திரு. ஏ. ஞானச்சந்திரன், உறுப்பினர் திரு. வி. ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் அத்தியட்சகர் திரு, என். கனகசபையையும் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளுமாறு அமைச்சர் உத்தரவிட்டிருந்தார். அமைச்சின் செயலாளர் டாக்டர் ரெஜி பெரேராவும் அமைச்சருடனிருந்தார். திரு. வி. சரவணபவானந்தனும் சமுகமளித்திருந்தார். அமைச்சரும், செயலாளரும் வைத்தியாலையின் குறைபாடுகளை மிக உன்னிப்பாக கேட்டறிந்து கொண்டனர்.

வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவுக்கு எட்டு வைத்திய உத்தியோகத்தர்களும் உள்ளக வைத்திய சேவைகளுக்கு இரண்டு வைத்திய உத்தியோகத்தர்களும் சத்திர சிகிச்சை பிரிவுக்கு இரண்டு வைத்தியஉத்தியோகத்தர்களும் மகப்பேறு வைத்திய சிகிச்சைப் பிரிவுக்கு இரண்டு வைத்திய உத்தியோகத்தர்களும், குழந்தை வைத்தியப் பிரிவுக்கு இரண்டு வைத்திய உத்தியோகத்தர்களும் வேண்டுமென தூது கோஷ்டியினர் அமைச்சரைக் கேட்டனர். அமைச்சர் வைத்திய உத்தியோகத்தர் பற்றுக்குறையை நீக்க இளைப்பாறிய வைத்திய உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கும், மருத்துவப் பட்டப்படிப்பை மேற்கொண்டு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்தார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் விசேட கொடுப்பனவுகளை வழங்கி வைத்தியசாலை வைத்திய சேவைக்கு அனுப்பவுள்ள வைத்திய உத்தியோகத்தர்களையும் வைத்தியசாலையில்

(7ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்தாண்டு

# யாழ்.மாவட்ட விவசாய அபிவிருத்திக்கு 33 லட்சம் ரூபா வழங்கப்பட்டது

## கமநல சேவை ஆணையாளர் பேட்டி

(நமது நிருபர் ஸ்ச்சி)

யாழ். மாவட்டத்தின் விவசாய அபிவிருத்திக்கு கடந்தாண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி இருபத்தெட்டு லட்ச ரூபாவையும் அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகராலயம் ஐந்து லட்சத்து பதின்மூவாயிரம் ரூபாவையும் வழங்கியுள்ளன. இவற்றுக்கான வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருப்பதாக வடக்கு கிழக்கு மாகாண கமநல சேவை ஆணையாளர் என். பரமலிங்கம் 'ஈழநாடு' வுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தகவல் தருகையில்; ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்பட்ட நிதியில் இருந்து கட்டிட புனர்நிர்மாணங்களுக்கு ஏழு லட்ச ரூபாவும் சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் அபிவிருத்திக்கு ஐந்து லட்ச ரூபாவும் விவசாய வீதிகள் நிர்மாணத்துக்கு எட்டுலட்ச ரூபாவும் தளபாட கொள் முதலுக்கு மூன்று லட்சத்தி எண்பத்திரெண்டாயிரம் ரூபாவும், உரமானியத்துக்கு நாலுலட்சத்தி அறுபதினாயிரம் ரூபாயும் செலவு செய்யப்பட்டுள்ளன. சென்ற வருடம் இதே நிதியில் இருந்து இருபத்திரெண்டு சிறிய குளங்களும் முப்பது விவசாய வீதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் வழங்கிய நிதியில் இருந்து ஐந்து நீர்ப்பாசனக்குளங்களும் ஐந்து விவசாய வீதிகளும் புனரமைக்கப்பட்டுள்ளன.

### 6557 மண்வெட்டி இலவசமாக வழங்கப்பட்டது

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு ஐக்கியநாடுகள் நல நிதியம் இரண்டாயிரத்து ஐநூறு குரங்குமார்க் இறக்குமதி செய்யப்பட்ட மண்வெட்டிகளை வழங்கியிருந்தது. புனர்வாழ்வு அமைச்சு நாலாயிரத்தி அறுபத்தேழு மண்வெட்டிகளை வாங்குவதற்கு நிதியை வழங்கியது. இவை அனைத்தும் யாழ். மாவட்டத்திலுள்ள பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பனனிரு கமநல சேவை நிலையங்கள் ஊடாக இலவசமாக வழங்கப்பட்டது. இவ்வாண்டு மேலும் பத்தாயிரம் மண்வெட்டிகளை புனர்வாழ்வு புனர்நிர்மாண அமைச்சு வழங்கும்.

### டிராக்டர்கள் அன்பளிப்பு

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு குறைந்த வாடகையில டிராக்டர்களை வழங்க ஆறு, நாலுசில்லு உழவுயந்திரங்களையும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் இருபத்தி மூன்று இரண்டு சில்லு உழவுயந்திரங்களையும் வழங்கியுள்ளது. அத்துடன் மூன்று நீரிறைக்கும் யந்திரங்களையும் இரண்டு பாரிய விசிறிகளையும் வழங்கியுள்ளது.

நல்லூர்கமநல சேவைநிலையத்தில் மாமரங்களைப் பாதிக்கும் பூச்சியைக் கட்டுப்படுத்த பாரிய கிருமிநாசினிவிசிறி உள்ளது. இதனை நல்லூர் கமநல சேவை நிலயத்தில் வாடகைக்கு பெற்று மாமரங்களை தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம் இப்பூச்சிகளை கட்டுப்படுத்தாவிடில் மாமரங்களில் பூக்கள் கருகி மாமரம் காய்ப்பது குறைவாகும் என்றூர்.

### விதைக்கிழங்கு விநியோகம்

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு கடந்த வருடம் ஒல்லாந்து நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட "டிகிறி" இன உருளைக்கிழங்கு விநியோகிக்கப்பட்டது. அவர்களுக்கு பத்தாயிரத்தி எண்ணூற்றிப் பதினைந்து பெட்டி உருளைககிழங்கு நலலூர், உடுவில், புததூர், உரும்பிராய், கீரிமலை கமநல சேவை நிலையங்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளன. இவை இருநூறு ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு. நல்லவிளைச்சலைக கொடுத்துள்ளது.

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு லுணுவில் தென்னம் கன்று நாற்று மேடையில் இருந்து நாலாயிரம் தென்னை முளைகள் இவ்வாண்டு கொண்டுவரப்பட்டு இங்கு நாற்றுமேடை அமைக்கப்படுவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன. கடந்த வருடம் யாழ். மாவட்டத்தில் அதிகம் காய்க்கக்கூடியதும், குட்டை இனத்தைச் சேர்ந்த ஏழாயிரம் தென்னம் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. பெரிய தென்னம் கன்றுகள் கமநலசேவை நிலையங்களில் கன்றொன்று இருபது ரூபாய்க்கு தறபோது விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

யாழ். மாவட்ட கமநல சேவை நிலையம் மரமுந்திரிகை கூட்டுஸ்தாபனத்தில் எடுத்து மரமுந்திரிகைக்கன்றுகள் தற்போது விநியோகம் செய்யப்பட்டுவருகின்றன. அத்துடன் தோடை, எலுமிச்சை, நெல்லி கொய்யா பழமரக்கன்றுகளும் வழங்கப்பட்டுவருகின்றன.

### தோட்டப் போட்டி

இவ்வாண்டும் யாழ்மாவட்டத்தில் தோட்டப்போட்டி நடைபெற ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இவை இம்முறை கமநல சேவை மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் நடைபெறும். போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்கு கடந்த ஆண்டைப் போல இவ்வாண்டும் பரிசுகள் வழங்கப்படும்.

இவ்வாண்டு யாழ்.மாவட்ட சிறிய நீர்ப்பாசன குளங்களை அபிவிருத்தி செய்ய யு. எஸ். எயிட் நிறுவனம் நிதியுதவி வழங்க இணங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

திரு. எஸ். பரமலிங்கம் யாழ்ப்பாண கமநல சேவை ஆணையாளராக இருந்து வடக்கு, கிழக்கு மாகாண கமநல ஆணையாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். (12)

## பருத்தித்துறை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கடமையாற்ற அனுமதி வழங்க வேண்டுமென தூதுக் கோஷ்டியினர் விடுத்த கோரிக்கையை அமைச்சர் முழுமையாக ஏற்றுக்கொண்டார்.

வைத்தியசாலைக்கு புதிய 'எக்ஸ்றே' இயந்திரமொன்று உடன் அனுப்பிவைக்கப்படுமெனத் தெரிவித்த அமைச்சர் இவ் வைத்தியசாலைக்கென நிரந்தர 'எ'க்ஸ்றேபடப்பிடிப்பாளரொருவரை நியமித்துத் தருவதாகவும் தெரிவித்தார், வைத்தியசாலைக்கு "பிசியோ திறபிஸ்ற்" ஒருவரும் அனுப்பப்படுவாரெனவும் குறிப்பிட்டார். எம். பீ. பீ. எஸ் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களை உள்ளக பயிற்சிகளுக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார். வைத்திய உத்தியோகத்தர்கள் இடமாற்றம் இடம்பெறும்போது பதிலாள் வரும்வரை அவர்கள் விடுவிக்கப்படக்கூடாது எனவும் தெரிவித்தார்.

பொது வைத்திய நிபுணரொருவரை வாரத்திற்கு ஒரு தடவையாவது இவ்வைத்தியசாலையில் சேவையாற்ற நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் சுகாதார சேவைகள் அத்தியட்சகரைப் பணித்தார். தற்பொழுது நாட்டு நிலைமைகள் சீரடைந்துள்ளபடியினுல் கண், தோல், காது, மூக்கு தொண்டை வைத்திய சிகிச்சைப் பிரிவுகளையும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சர் உத்தரவிட்டார். வைத்தியசாலையின் செயலாளராக அண்மையில் பதவி உயர்வுபெற்ற திரு. சுப்பிரமணியம் என்பவரை உடனடியாக அனுப்பி வைக்குமாறும் அமைச்சர் உத்தரவு பிறப்பித்தார். மனநோய் வைத்திய நிபுணரைக் கண்டுபிடித்து பருத்தித்துறை, தெல்லிப்பழை வைத்தியசாலைகளில் மனநோய் வைத்திய சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சைகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் சுகாதார சேவைகள் அத்தியட்சகர் பணிக்கப்பட்டார்.

வைத்தியசாலையின் கழிவு அகற்றும் நடவடிக்கைகள் பற்றியும், தாதிகள் பற்றாக்குறைகள் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டபோது இவ்விரு நடவடிக்கைகளுக்கும் வடக்கு கிழக்கு மாகாணசபை சுகாதாரப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அமைச்சர் தெரிவித்தார். சமயாசமய ஊழியர்களையும், சுகாதாரத் தொழிலாளர்களையும் ஒரு தொகுதியினரைத் தெரிவு செய்து வைத்து தேவையேற்படும் போது அவர்களை நியமிக்குமாறும் அமைச்சர் தெரிவித்தார்.

இறுதியில் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை செயலாளர் திரு. கே. வி. செல்வராஜன் அமைச்சருக்கு நன்றி தெரிவித்தார். (52)

## நாடெங்கும்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

### மாணவர்களுக்கு

கல்வியில் உயர்வான நிலையும், எதிர்பாராத சித்தியும் கிட்டும். புலமைப் பரிசில்கள் சாத்தியமாகும். கல்வி சம்பந்தமாக வெளிநாடு செல்ல வாய்ப்புண்டு. தந்தையரது ஒத்துழைப்பு கல்வியை வளப படுத்தும்.

(நாளைய இதழில் சனி தோசத்திற்கானபரிகாரம்விபரமாக வெளிவரும். சனியின் பாவத்தைப் பொறுத்து தனித்தனியாக தரப்பட்டுள்ளது. (தொடரும்)

## பயிற்சி வகுப்புகள்

(கொககுவில்)

கொக்குவில் மேறகு கிராம அபிவிருத்திசங்க கட்டிடத்தில் இயங்கிவரும், றெட்டறிக் கழக கொக்குவில் மேற்கு கிராமியக்குழுவினரால் சிகை அலங்காரம், ஐசிங்செய்தல்: கோலம் போடுதல் போன்ற பயிற்சி வகுப்புகளை நடாத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்குழுவினரால் நடாத்தும் தையல் பயிற்சி வகுப்பில்சுமார்எழுபத்தைந்து யுவதிகள் பயின்று வருவது குறிப்பிடத்தக்கது. (138)


எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(1) சத்யராஜ் ★ கௌதமி ★ கவுண்டமணி "வாழ்க்கைச் சக்கரம்"

(2) நாகர்ஜுன் ★ ரகுவரன் ★ அமலா "உதயம்"

(3) ஜெமினி ★ தேவிகா ★ M. R. ராதா "இயத்தில் நீ" (ஒறிஜினல்)

(4) The Iron Triangle (WAR)

(5) Robocop

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-567)

ஈஸ்வரி பவனம்

(லொட்ஜ்)

கொழும்பு செல்லும் வடபகுதி பிரயாணிகளுக்கு, வெள்ளவத்தையில் மிகவும் பாதுகாப்பான சகல வசதிகளுடனும், சாதாரண கட்டணத்தில் தங்குமிடவசதி.

(வெள்ளவத்தை சைவமங்கையர் கழகத்திற்கு அருகில்)

ESWARI BAWANAM

(LODGE)

No. 15, Rudra Mawatte,
Wellawatte,
Colombo-6.

அனைவரும் வருக!

நன்றி.

(சி 3520)

ஹரன் சினிமா யாழ்ப்பாணம்

குதூகல ஆரம்பம்

சிவராத்திரியை முன்னிட்டு 10-30, 2-30, 6-30 9-30

கமலஹாசன், சரண்யா, கார்த்திகா, ஜனகராஜ், குயிலி

நடித்த

நாயகன்

இரண்டு விருதுகள் பெற்று நூறுநாள் ஓடிய வெற்றிச் சித்திரம்

மணிரத்தினத்தின் வெற்றிப்படைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "அமரர் பிரசாத் ஒரு தீர்க்கதரிசி"

(பண்டத்தரிப்பு)

"இன்றைய அரசியல் சூழ்நிலையை அன்றே எமது மக்களுக்கு எடுத்துக்கூறிய தீர்க்கதரிசியாக அமரர் பிரசாத் விளங்கினுர். விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் நிலைப்பாட்டைக் கிராமம் கிராமமாகப் பிரசாரம்செய்து மக்கள் மத்தியில் இயக்கத்திற்குக் கவர்ச்சியையும் செல்வாக்கையும் ஏற்படுத்தினுர்.

திலீபனுக்குப் பின்னர் மக்களிடையே பிரசாரத்தின் மூலம் அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய அமரர் பிரசாத் அணையாச் சுடராக எம் நெஞ்சங்களில் என்றும் இருப்பர்."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னுள் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் அமரர் பிரசாத்(முரளி)தின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் சித்தன்கேணி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு க. குலசூரியர் குறிப்பிட்டார்.

சித்தன்கேணி பிள்ளையார் கோயில் வீதியில் அண்மையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சட்டத்தரணி தவிக்னராஜா முன்னுள் யாழ். மாவட்ட உறுப்பினர் சு. நடேசு, சங்கானை ப. நோ. கூ. ச. தலைவர் ந சிவசுப்பிரமணியம் உட்படப் பலர் உரையாற்றினர். (72)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் மெய்வல்லுநர் போட்டியின் ஓர் அங்கமாக மரதன் ஓட்டம் இன்று காலை நடைபெறும்.

இப்போட்டியில் ஐந்து மைல் பெண்கள் சைககிள் ஓட்டமும், ஐந்து மைல் ஆண்கள் கால்நடைப் போட்டியும் இடம்பெறும். இந் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக வண்ணுர்பண்ணை வடக்கு கொததணி அதிபர் திருமதி தி. நாகராஜா கலந்துகொள்வார். (12)

### அவசரகால

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய வருவோரைத் தாக்கவும் முடியும். அப்படியான சந்தர்ப்பங்களில் நான் சம்பந்தப்பட்ட பொதுமக்கள் பக்கமே இருப்பேன்.

இரவு நேரங்களில் கைது செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படமாட்டாது.

கடந்த சில தினங்களுக்கு முன் மரணமடைந்த திரு. ரிச்சார்ட் டிசொய்சாவின் கொலை குறித்து பூரணவிசாரணை ஒன்றும் நடத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் கூறினுர்.

### இராமநாதபுரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யடுத்தே அகதிகள் முகாமில் மோதல் சம்பவம்இடம்பெற்றதாகவும் அச்செய்தி குறிப்பிடுகிறது.

இதேவேளை பொலிஸ் நிலைய தாக்குதலையடுத்து இலங்கை தமிழர் தங்கியிருக்கும் அகதிகள் முகாமிற்கு பலத்த பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## பட்டதாரிகளுக்கு மார்ச் 1-ம் திகதி நியமனம்

(திருமலை)

வடக்கு, கிழக்கு மாகாண அரசு வடக்கு, கிழக்கிலுள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பளிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. ஏற்கனவே நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து வேலையற்ற பட்டதாரிகளுக்கும் மார்ச் 1-ம் திகதி முதல் நியமனம் வழங்குவதற்கான நியமனக் கடிதங்கள அனுப்பப்பட்டு வருவதாக பிரதம செயலாளர் திரு. வே. ந. சிவராசா தெரிவித்தார்.

இதேவேளை நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றத்தவறிய வேலையற்ற பட்டதாரிகளுக்கு இறுதிச் சந்தர்ப்பமாக எதிர்வரும் 25-ம் திகதி ஞாயிறு மு. ப. 9-00 மணிக்கு உள்துறைமுக வீதியில் உள்ள உள்துறை அமைச்சில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)


## மரண அறிவித்தல்

### மேரி றீசா பெனடிக்ற்

மேரி றீசா பெனடிக்ற் காலமாகிவிட்டார். இவர் ராஜன் பெனடிக்றின் அன்பு மனைவியும், ருேஷான், ரஜீவ், நிரோஷன் ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்ற மரியதாஸ் (இளைப்பாறிய ஆசிரியர், சூருவத்தை), திருமதி மரியதாசின் புத்திரியும், பெனடிக்ற் (இளைப்பாறிய Railway Head Guard), திருமதி பெனடிக்ற் ஆகியோரின் மருமகளும், றீற்ரு, ஷாந்தம் அவர்களின் சகோதரியும், செல்வகுமார், சந்திரகுமார் (Newzealand), சூரியகுமார் (Doha), ராஜி, பிரேமராஜன், ரெஜினேல்ட் ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் பூதவுடல் இல. 236, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலிருந்து சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு புனித யுவானியார் தேவாலயத்துக்கு திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டு, பின் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்: கணவர், பிள்ளைகள்.

இல. 236, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி 3521)



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு மாசி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81. Eelanadu P. O Box No. 49. Telegram; Eelanadu Telephone: 2291,


## அம்பாறையில்
# தமிழ் மொழியில் கருமங்கள் முழுமையாகசெயற்படவில்லை

### மக்கள் கவலை

(அக்கரைப்பற்று நிருபர்)

சிங்கள மொழியைப் போன்று தமிழ் மொழிக்கும் சமமான உரிமை வழங்கப்பட்டு இருமொழியும் அரச கரும மொழியாக பிரகடனப்படுத்தியபோதிலும் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மொழி முழுமையாக செயல்படுவதாக இல்லை, முக்கியமாக தமிழ் பேசும் மக்களே அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளும் கடிதங்கள் முழுவதும் சிங்கள மொழியிலும், ஆங்கில மொழியிலும் இருப்பதால் அந்த மொழியிலே அதிகாரிகள் பதில் அனுப்பவேண்டியதாக இருக்கிறது.

பல்வேறு பொது நிறுவனங்கள் சங்கங்கள், அரசுடன தமிழ்மொழியில் தொடர்பு கொளளுங்கள் என்று ஆரம்பத்தில் ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தபோதிலும் அப்போது அவர்களும் அது பற்றிக் கவனம் செலுத்துவதாக இல்லாத காரணத்தினுல் எல்லாம் சிங்கள மொழியில்தான் நடைபெறுகிறது. இதற்கு இன்னும் ஒரு முக்கிய முக்கிய காரணமாக இருக்கிறது. சகல திணைக்களங்களிலும் உள்ள உயர்மட்ட அதிகாரிகள் சிங்களவராகவே இருக்கிறுர்கள் என்பதும் ஒரு காரணமாக இருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

அக்கரைப்பற்று வைத்தியசாலைக் கட்டிடம் 1985 ஆம் ஆண்டில் பாதுகாப்பு படையினர் முகாம் அமைப்பதற்கு பொறுப்பேற்றனர். இதனுல் ஆஸ்பத்திரி அக்கரைப்பற்றிலிருந்த பழைய பிரசவ விடுதிக் கட்டிடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. இந்திய அமைதிப்படையினர் அம்பாறை மாவட்டத்திலிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து ஆஸ்பத்திரிக் கட்டிடத்திலிருந்தும் பாதுகாப்புப்படை வெளியேறியது.

ஆனுல் ஆஸ்பத்திரிக் கட்டிடத்தை சபபந்தப்பட்ட அதிகாரிசள் உடனடியாகப் பொறுப்பேற்று அங்கு செல்லாது கைவிட்டமையினுல் ஆஸ்பத்திரிக் கட்டிடத்தில் இருந்த கதவுகள், ஜன்னல்கள், மின் உபகரணங்கள் போன்றவற்றை எல்லாம் இனம் தெரியாதவர்கள் களவாடியதினுல் ஆஸ்பத்திரிக் கட்டிடம் இன்றுவரை உபயோகிக்க முடியாத நிலையில் இருக்கிறது.

இதுபற்றி பொது மக்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின்பேரில் சுகாதார அமைச்சர் உடனடியாக வைத்தியசாலையை செயல்படுத்துமாறு உத்தரவிட்டு, தற்காலிகமாக வேலைகளை மேற்கொள்வதற்கு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டபோதிலும் இன்றுவரை உருப்படியாக எந்தவொரு வேலையும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை.

## கிளிநொச்சியில்
# பழச்சாறு தகரத்தில் அடைக்கும் தொழிற்சாலை
## 4000 பேருக்கு வேலைவாய்ப்பு

(பருத்தித்துறை)

கிளிநொச்சியில் பழச்சாறு தகரகத்தில் அடைக்கும் தொழிற்சாலை ஒன்று 50 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

இப்பழச்சாறு தகரத்தில் அடைக்கும் தொழிற்சாலைககு கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னுர், வவுனியா மாவட்டங்களிலிருந்து தக்காளி, பப்பாசி, கொய்யா, மாம்பழம், விளாம்பழம், அன்னுசிப்பழம், பனம் பழம்போன்ற பழங்களைப் பெற்றுப் பதனிட்டுச் சந்தைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

மணித்தியாலயத்திற்கு 1500 லீற்றர் பழச்சாற்றினை உற்பத்தி செய்யக் கூடிய இயந்திரத்தொகுதியை இறக்குமதி செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதும் சுமார் 4,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (52)

### மதிய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டு சிகிச்சையளிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து மில்கோ நிறுவனத்தால் அதன் சில்லறைக் கடைகளுக்கு விநியோகிக்கப்பட்ட சுமார் பத்தாயிரம்பால் பைக்கட்டுகள் அழிக்கப்பட்டன.

இந்தப் பாலை அருந்தியவுடன் வயிற்றில் கடும் வலி ஏற்பட்டதாகவும், குமட்டல் எடுத்ததாகவும் ஒரு மாணவர் தெரிவித்துள்ளதுடன் பால் எண்ணெய் போல் இருந்ததாகவும் புளித்ததாகவும் அவர் கூறினுர்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் மதிய உணவாக வழங்கப்பட்ட பாலை அருந்திய நுவரெலியா பொலன்னறுவை ஆகிய இடங்களில் உள்ள இரு பாடசாலை மாணவர்களுக்கு இவ்வாறு வாந்தியும், வயிற்றுவலியும் ஏற்பட்டது. [து]

### உதிரிப்பாகங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதனுல் பஸ் வண்டிகள் திருத்தவேலைகளுக்காக மேற்படி டிப்போவில் தேங்கிக் கிடக்கின்றன.

மேலும் 43 பஸ்கள் சேவை செய்யவேண்டிய டிப்போவில் 14 பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

இந்நிலை நீடிக்கும் பட்சத்தில் பருத்தித்துறை டிப்போவை மூடவேணடிய நிலை ஏற்படலாம் என்று மேற்படி டிப்போ உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். (ய)

### பேச்சுவார்த்தை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஈ. என். டி. எல். எவ். புளொட் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மேலும் மாகாணசபையைக் கலைத்து புதிதாகத் தேர்தல் நடாத்தப்படும் பட்சத்தில் தமிழ் குழுக்களிடையே மோதல் ஏற்படும் என்றும் இக்குழுக்கள் வலியுறுத்தியிருந்தன.

ஆனுல் மாகாணசபை கலைக்கப்பட்டு சுதந்திரமான தேர்தல் ஒன்றை நடத்துவதன் மூலமே தமிழீழ மக்களின் உண்மையான பிரதிநிதிகள் யாரென்பதை அவர்களால் தெரிவுசெய்ய முடியும் என்றும் அமைதிப்படையினர் வடக்கு-கிழக்கில் இருந்தபோது அவர்களது கட்டுப்பாட்டிலிருந்த குழுக்கள் மாத்திரமே மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்ற வாய்ப்பிருந்ததென்றும் வடக்கில் தேர்தல் நடாத்த வாய்ப்பே இருக்கவில்லையென்றும் விடுதலைப்புலிகள், ஈரோஸ் இயக்க பிரதிநிதிகள் முதல்வரிடம் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து எழுந்துள்ள முரண்பாடுகளை நிவர்த்திக்கவும் மேலதிக முடிவுகளை மேற்கொள்ளவும் பிரதமர் திரு. வி. பி. சிங்கிடம் அமைச்சர் திரு. முரசொலி மாறன் சகல விபரங்களையும் நேற்றுத்தெரிவித்தார். (சி)

## இன்று கருந்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டமுறைசாராக் கல்வித்திட்டத்தின்கீழ் நடைபெற்றுவரும் படவரைஞர் பயிற்சிநெறியைப் பயின்றுவரும்மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள "எம்மை வாழ்க்கைக்கு தயாராக்குவோம்" என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று காலை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## சிறந்த சாரதிகள்

(புலோலி)

வடபிராந்திய போக்குவரத்துச்சபை அண்மையில் நடத்திய சிறந்த நற் சாரதிப் போட்டியில் பருத்தித்துறை டிப்போவைச் சேர்ந்த திரு. கே. வேலாயுதம் முதலாம் இடத்தையும், திரு. என். நவரத்தினம் மூன்றும் இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

யாழ். (கோண்டாவில்) டிப்போவைச் சேர்ந்த திரு. ஜேசுதாசன் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார். (த)

## கூட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

வண்ணுர்பண்ணை மக்களால் ஒழுங்கு செய்யப்பட்ட மரணித்த வீரர்களின் நினைவுக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

இந் நினைவுக் கூட்டத்தில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி யாழ். பிராந்தியப் பொறுப்பாளர் திரு. டொமினிக் கலந்து கொள்ளவிருக்கிறுர். (எஸ்)

## ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவை நடத்தும் பேராசிரியர் கைலாசபதி நினைவு ஆய்வரங்கு 25ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் சிறும்பியடியில் உள்ள மணியம் கட்டிடத்தில் நடைபெறவுள்ளது.

### எந்த ஒரு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினுர்.

வடக்கு, கிழக்கு மாகாண சபையை கலைப்பதென்பது முக்கியமான பிரச்னை அது சம்பந்தமாக முடிவெடுக்க அவகாசம் தேவையென்று ஈ. பி. ஆர். எல். எல். வலியுறுத்தியதாகவும் அவர் கூறினுா.

மேலும் இம்மாதம் 25-ம் திகதிக்குப்பின்னர் மீண்டும் புலிகள் ஈரோஸ் தவிர்ந்த ஏனைய அமைப்புக்களைச் சந்தித்து தாம் பேசவுள்ளதாகவும் தெரிவித்தார். (து)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org